வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்

Email : news@eelanadu.lk மலர் : 04 26.05.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 147 பக்கங்கள் : 16



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


# தமிழ்க் கட்சிகளால் ஒற்றுமையாக பொது வேட்பாளரை நிறுத்தமுடியாது

## விக்னேஸ்வரனிடம் தெரிவித்தார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், மே 26

**தமிழ்க் கட்சிகளால் ஒற்றுமையாக - ஓரணியாக தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த முடியாது என்று விக்னேஸ்வரன் எம்.பியிடம் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று சனிக்கிழமை தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரனை அவரின் இல்லத்துக்கு தேடிச் சென்று சந்தித்தார். நேற்று மாலை இடம்பெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவித்தவை வருமாறு -

தமிழ்க்கட்சிகள் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. அவர்களால் ஒற்றுமையாக பொது வேட்பாளரை நிறுத்தமுடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார். இது எமக்கு - தமிழ்க்கட்சிகளுக்கு வெட்கக்கேடான விடயம்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளருக்கு வாக்களித்த பின்னர் இரண்டாவதாக சிங்கள வேட்பாளருக்கு வாக்களிப்பதை தாம் வரவேற்பதாகவும் 15

## அரசியல் தீர்வு அவசரமில்லை: விக்கியிடம் கூறினார் ரணில்

யாழ்ப்பாணம்,மே26,

வடக்கு - கிழக்கில் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதுதான் இப்போது முக்கியம். அரசியல் தீர்வு இப்போது அவசரமில்லை.

இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் சீ.வீ.விக்னேஸ்வரனிம் நேற்று நேரில் குறிப்பிட்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. 15

## ஜனாதிபதித் தேர்தலுக்கு மக்கள் கருத்துக்கணிப்பா?

### மறுக்கிறார் அமைச்சர் பந்துல

கொழும்பு, மே. 26

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக மக்கள் கருத்துக்கணிப்பு பெறப்படவுள்ளதாகக் கூறப்படும் தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல 15

## கிளிநொச்சி பெரும் முன்னேற்றம் மாங்குளத்தில் முதலீட்டு வலயம்!


### ஜனாதிபதி ரணில் நேற்று அறிவிப்பு

கிளிநொச்சி, மே. 26

கிளிநொச்சி நகரில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. மாங் குளம் பிரதேசத்தில் முத லீட்டு வலயம் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் அந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட 15



## அர்த்தமுள்ள அதிகார பகிர்வில் நாங்கள் ஆர்வமாக உள்ளோம்!

### கிளிநொச்சியில் கூறினார் சுமந்திரன்

கிளிநொச்சி, மே. 26

"யாழ். போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக மாற்றப்படும் என ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் அறிவித்துள்ளார். எவ்வாறாயினும், நாங்கள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வில் ஆர்வமாக உள்ளோம்."

-இவ்வாறு தெரிவித்தார் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட மகளிர் சுகாதார 15

ரணில் வருகைக்கு எதிர்ப்பு:

## போராட்டங்கள் நடத்துவதற்கு கிளிநொச்சி நீதிமன்றம் தடை!

கிளிநொச்சி, மே. 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கப்படவிருந்த போராட்டங்களுக்கு நீதிமன்றத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் சார்பில் கதிர்காமநாதன் கோகிலவாணி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 15

## பெண்களுக்கான சிறப்பு சுகாதார நிலையம் கிளிநொச்சியில் ஜனாதிபதி திறந்து வைத்தார்!



கிளிநொச்சி, மே. 26

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் 5,320 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பெண்களுக்கான சிறப்பு சுகாதார நிலையம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் நெதர்லாந்து அரசாங்கத்தின் உதவியுடன், அரசாங்கம் இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அரசின் மூத்த அதிகாரிகளை வடக்கு ஆளுநர் வெறுக்கிறார்

### ஜனாதிபதிக்கு விக்னேஸ்வரன் எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம், மே. 26

வடக்கில் அரசாங்க அதிபர்கள் மற்றும் அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமனம் அரசியல் காரணமாக பின்னடிப்புச் செய்யக் கூடாதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் எழுத்து மூலம் கடிதம் அனுப்பியுள்ளார்.

முக்கியமான நிர்வாகப் பதவிகளுக்கு மூத்த இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளை நியமிப்பதை ஆளுநர் வெறுக்கிறார் எனவும் அவர் 15

## சீரற்ற காலநிலையால் ஏழு பேர் உயிரிழப்பு!

### 45,344 பேர் பாதிப்பு

கொழும்பு, மே. 26

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 7 பேர்பலியாகியுள்ளனர். மேலும் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

18 மாவட்டங்களில் 15

## தமிழினம் அழிந்த பின்னர்தான் சம்பந்தன் வெளியக சுயநிர்ணய உரிமை கேட்பாரா?

### கேள்வி எழுப்புகிறார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், மே. 26

ஈழத் தமிழினம் அழிந்ததன் பின்னர் தான் சம்பந்தன் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோரப் போகின்றாரா? என தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் தொடர்பில் இரா.சம்பந்தன் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 'தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில் மன்னாரில் மக்கள் மேடை

## அரசியல் பிரதிநிதிகள், மக்கள் பங்கேற்பு

மன்னார், மே. 26

தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம் எனும் தொனிப்பொருளில் பவ்ரல் அமைப்பின் ஏற்பாட்டில், மன்னார் மார்ச் 12 இயக்கத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த மக்கள் மேடை நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை மன்னாரில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

மார்ச் 12 இயக்கத்தின் மாவட்ட தலைவர் கொன்ஸால் வாஸ் தயாளராஜன் தலைமையில் இடம்பெற்ற குறித்த மக்கள் மேடை நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ,அரசியல் கட்சிகள், பொது மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் ஆகிய வற்றிற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பொது மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், மத தலைவர்கள், இளைஞர், யுவதிகள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்னைகள் குறித்து அரசியல் பிரதிநிதிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் தூய்மையான அரசியல் கலாசாரத்தை உருவாக்குதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மண் அகழ்வு குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனம் காப்பது குறித்து மக்களினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

எனவே மாவட்டத்தில் தொடர்ச்சியாக பல்வேறு பிரச்னைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஓரணியில் செயல்பட்டு மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரச்னைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (அ)

# தேயிலை உற்பத்தித்துறையை வினைத்திறனாக்க நடவடிக்கை

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, மே. 26

அதிக வருமானம் ஈட்டும் துறையாக தேயிலை உற்பத்தித் துறையை மீண்டும் அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அக்குரஸ்ஸ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் தேயிலையை மீண்டும் உலகத்தரம் வாய்ந்த நிலைக்கு கொண்டு செல்வதற்காக பல புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

சிலோன் தேயிலை நாமத்தை உலகத்தரம் வாய்ந்தது. இன்று தேயிலை ஏற்றுமதியில் போட்டித்தன்மை அதிகரித்துள்ளது.

மாத்தறை தென்மாகாணத்தை மையப்படுத்தி தரம் வாய்ந்த தேயிலைத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தேயிலை பயிர்ச் செய்கையாளர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம்.

தனியார் துறையுடனும் இணைந்து செயற்படுவதன் ஊடாக அதனை வெற்றிகரமாக செயற்பட முடியும்.

இதனூடாக பெண்களுக்கு அதிகளவில் வேலைவாய்ப்பை வழங்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

அதிக வருமானம் ஈட்டும் துறையாக தேயிலை உற் பத்தித் துறையை மீண்டும் அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் - என்றார். (அ)

# இரத்தினபுரி கேரகலயில் அதிகூடிய மழை வீழ்ச்சி!

கொழும்பு, மே. 26

நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் அதிகூடிய மழை வீழ்ச்சி இரத்தினபுரி மாவட்டத்தின் கேரகல பகுதியில் பதிவாகியுள்ளது.

அங்கு 185.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. மொரலியஓயாவில் 143.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் நிக்கவரெட்டியவில் 100.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# மலையக ரயில் மார்க்கத்தில் ரயில் சேவைகள் பல இரத்து

கொழும்பு, மே. 26

மலையக ரயில் மார்க்கத்தின் பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதால், நேற்றும் ரயில் சேவைகளுக்கு இடையூறு ஏற்பட்டது.

கடுகன்னாவை பகுதியில் மரமொன்று முறிந்து வீழ்ந்தமையினால், கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச்செல்லும்பொடி மெனிக்கே ரயில் குறித்த பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டது.

இதல்கஸ்ஹின்ன பகுதியில் மரமொன்று முறிந்து வீழ்ந்தமையினால், பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் உடரட்ட மெனிக்கே ரயில் சேவையும் பாதிக்கப்பட்டது.

இதனிடையே, அதிக மழை மற்றும் காற்றுடனான வானிலையால் ரயில் மார்க்கங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை கருத்திற்கொண்டு கொழும்பு - பதுளைக்கிடையிலான இரண்டு இரவு நேர தபால் சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே, பதுளையில் இருந்து கொழும்புக்கு செல்லும் வீதியில் தியத்தலாவைக்கும் ஹப்புத்தளைக்கும் இடையிலான போக்குவரத்து மீண்டும் தடைப்பட்டுள்ளது.

எனவே, பண்டாரவளையில் இருந்து ஹப்புத்தளை செல்லும் மேல் வீதியை பயன்படுத்துமாறு வாகன சாரதிகளிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# மற்றோர் இலங்கையர் ரஷ்யாவில் நிர்க்கதி!

## நாட்டுக்கு வர உதவுமாறு உறவினர்கள் வேண்டுகோள்

கொழும்பு, மே. 26

ரஷ்ய இராணுவத்தில் இணைந்துகொண்ட மற்றுமொரு இலங்கையர் நிர்க்கதிக்குள்ளாகி உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்தின் தலையீடு இன்றி ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு கூலிப்படையாக இலங்கைப் பாதுகாப்புப் படையின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் கடத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் தொடர்ந்தும் செய்திகள் வெளியாகி வருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் பொலனறுவை - புலஸ்திகம பகுதியைச் சேர்ந்த நபரொருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், அவரை நாட்டுக்கு அழைத்து வருமாறு உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றிய குறித்த நபர் ஓய்வு பெற்று ஏழு ஆண்டுகளின் பின்னர் வறுமை நிமித்தம் கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி ரஷ்யாவுக்கு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், கடந்த 22ஆம் திகதி குறித்த நபர் தனது வீட்டுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இரண்டு கால்களிலும் காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் புலஸ்திகம பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# சுதந்திர கட்சியுடன் கூட்டு அமைக்க பெரமுன திட்டம்

## தேர்தல் தொடர்பான நிலைப்பாட்டை விரைவில் வெளிப்படுத்துவதாக அறிவிப்பு




கொழும்பு, மே. 26

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைப்பதற்கு ஆளும்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சித்து வருவதாக பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

இதன்படி, பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த 30 பாராளுமன்ற உறுப்பினர்கள், சுதந்திரக் கட்சியின் 14 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணையவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது நிலைப்பாட்டை விரைவில் அறிவிப்பதாகவும் அனுர பிரியதர்சன யாப்பா கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவுடன் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கட்சியின் அதிகாரத்தை கைப்பற்றும் முயற்சியால் சுதந்திரக் கட்சி பெரும் குழப்பத்தில் உள்ளது.

அதேநேரம், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் எனும் பொதுஜன பெரமுனவின் கோரிக்கையை நிராகரித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதாக அமைச்சரவையில் அறிவித்துள்ளார்.

இதன்படி, அடுத்த வருடம் நடைபெறவுள்ள பாராளு மன்றத் தேர்தலைக் கருத்திற் கொண்டு இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களிடையே ஒப்பீட்டளவில் நீண்ட கால ஒருமித்த கருத்தை விரும்புவதாக பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா மேலும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை மீட்டு சவால்களைத் தனி நபராக எதிர்கொண்ட தலைவர் ஜனாதிபதி ரணில்

## வடக்கு ஆளுநர் சாள்ர்ஸ் புகழாரம்



யாழ்ப்பாணம், மே. 26

**நெருக்கடியில் சிக்கித் தவித்த நாட்டை மீட்டெடுத்து சவால்களை தனி நபராக எதிர்கொண்டு நாட்டை மாற்றி அமைத்த தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என வடக்கு மாகாண ஆளுநர் சாள்ர்ஸ் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் மருத்துவப்பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கான கட்டடத்தொகுதி ஜனாதிபதி திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். பல்கலைக்கழகத்துக்கான பாரிய மைல்கல் நிகழ்வாக இன்றைய நிகழ்வு அமைந்துள்ளது. நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த இந்த கட்டடத்தொகுதியை விரைவில் திறந்து, பயன்பாட்டுக்கு வழங்குமாறு கடந்த மார்ச் மாதம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தேன்.

கோரிக்கையை ஏற்று, மே மாதம் கட்டடம் திறக்கப்படும் என அவர் கூறினார். அதன் பின்னர் ஒரு தடவைகூட இது தொடர்பில் பேசவில்லை. எனினும் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய ஜனாதிபதி இந்த கட்டடத்தை திறந்து வைத்துள்ளார். இதுவே தலைமைத்துவத்திற்கான சிறந்த வெளிப்பாடு. சிறந்த தலைவர் ஒருவர் செயற்படக்கூடிய விதம் இதுவே.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த நாட்டை மீட்டெடுத்த தலைவர் எமது ஜனாதிபதி. அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாரம் இன்றி நாடு இருளுக்குள் கிடந்தபோது, தலைமைத்துவத்தை பொறுப்பேற்று சவால்களை வெற்றி கொண்டார். பல சவால்களை தனி நபராக எதிர்கொண்டு, நாட்டை மாற்றி அமைத்தார். இவ்வாறான ஜனாதிபதியின் பிரதிநிதியாக வடக்கில் ஆளுநராக சேவையாற்றுவதில் பெருமிதம் அடைகின்றேன் - என்றார். (அ)

# மல்வானை வயலில் இருந்து 2 இளைஞர்களின் சடலங்கள்!

கொழும்பு, மே. 26

கம்பஹா, தோம்பே, மல்வானை பிரதேசத்தில் வயலொன்றிலிருந்து இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தோம்பே பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலதென்னவத்த மற்றும் ரம்பொடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18 மற்றும் 29 வயதுடைய இரண்டு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் கடந்த 22 ஆம் திகதி அவர்கள் தங்கியிருக்கும் விடுதியிலிருந்து வெளியே சென்றுள்ள நிலையில் மீண்டும் திரும்பி வராததால் குறித்த விடுதியிலிருந்த நபரொருவர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தோம்பே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தனியார் வைத்தியசாலையில் தீ!

கொழும்பு, மே. 26

கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தீ பரவல் ஏற்பட்டது.

வைத்தியசாலையின் மூன்றாவது மாடியில் தீ பரவியதன் காரணமாக கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புத் துறைக்குத் தகவல் வழங்கப்பட்டது.

பின்னர், இரண்டு தீயணைப்பு வாகனங்கள் அனுப்பப்பட்டதாகவும், தீ முற்றாகக் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் கொழும்பு மாநகரசபையின் தீயணைப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த தீ பரவலுக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

# நுவரெலியாவில் அதிக பனிமூட்டம்

கொழும்பு, மே. 26

நாட்டில் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலையை தொடர்ந்து நுவரெலியாவில் மழையுடனான வானிலை காணப்படும் நிலையில் நேற்று சனிக்கிழமை காலை முதல் அதிக பனிமூட்டம் நிறைந்து காணப்பட்டது.

குறிப்பாக நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் பிலக்பூல் சந்தி, வெண்டிகோனர், பங்களாஹத்த, நானுஓயா, ரதல்ல குறுக்கு வீதி போன்ற இடங்களில் வழக்கத்துக்கு மாறாக அதிகளவான பனிமூட்டம் காணப்பட்டது. இதனால் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் சிரமங்களை சந்தித்தனர்.

நுவரெலியா - ஹற்றன் ஏ-7 பிரதான வீதியில் சென்ற வாகனங்கள் அதிக ஒலி எழுப்பிய வாறும், வாகன விளக்குகளை ஒளிரவிட்டும் செல்வதை அவதானிக்க முடிந்தது. மேலும் தொடர்ந்து மழை பெய்வதால் அதிக குளிருடன் கூடிய கால நிலை காணப்படுகிறது. (அ)

# தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை பணிப்பாளர் சபைக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்

கொழும்பு, மே. 26

தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கு புதிய உறுப்பினர்கள் 3 பேரை சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண நியமித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபை சட்டத்திற்கமைய சட்டம், கணக்கியல், முகாமைத்துவம் மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் இருந்து பணிப்பாளர் சபைக்கு சிறந்த நிபுணர்களை பரிந்துரைக்கவும் நியமிக்கவும் அமைச்சருக்கு அதிகாரம் உண்டு.


அதன்படி, பட்டய கணக்காளர் சுஜீவ முதலிகே, ஜனாதிபதி சட்டத்தரணி மற்றும் இலங்கை நிர்வாக சேவையின் தரம் 1 இன் சிரேஷ்ட அதிகாரி சுசந்த கஹவத்த பாலித குமாரசிங்க ஆகியோர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவினால் நியமிக்கப்பட்ட மூன்று நிர்வாக சபை உறுப்பினர்கள் இராஜினாமா செய்ததை அடுத்து இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கணக்கியல் துறையைச் சேர்ந்த சுபுல் விஜேசிங்க, சட்டத் துறையைச் சேர்ந்த சட்டத்தரணி மனோஜ் கமகே மற்றும் நிர்வாகத் துறையைச் சேர்ந்த கட்டடக் கலைஞர் பிரியந்த சேரசிங்க ஆகியோர் இராஜினாமா செய்துள்ளனர். (அ)

# வடக்கு மாகாணத்துக்கான வீட்டுத்திட்டம் மீள ஆரம்பம்

## ஜனாதிபதி ரணில் உறுதி



கொழும்பு, மே. 26

பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்ட வட மாகாணத்திற்கான வீட்டுத்திட்டம் அடுத்த வருடம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட மக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், நாட்டு மக்களின் காணி உரிமை உறுதிப்படுத்தப்பட்டு முன்னோக்கி செல்வதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் மேலும் கூறினார்.

தெற்காசியாவிலேயே மக்களுக்கு இலவச காணி உரிமையை வழங்கும் ஒரே நாடு இலங்கை எனவும் உறுமய வேலைத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் இலவசப் பத்திரங்களை அடுத்த சந்ததியினர் பயன்படுத்தும் வகையில் பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் உரிமையாளர்களிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்ட வட மாகாண வீட்டுத்திட்டம் அடுத்த வருடம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் இலவச காணி உரிமைத் திட்டம் அதன் ஒரு படியாகும் என்பதுடன், உறுமய வேலைத்திட்டம் நாட்டிலேயே மிகப்பெரிய தனியார் மயமாக்கல் திட்டம் எனவும் அவர் கூறினார்.

அத்தோடு, தொல்பொருளியல் நடவடிக்கைகளுக்கு தேவையான காணிகளை தவிர்த்து ஏனைய காணிகளை மீள ஒப்படைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், அதன் பிரகாரம் இந்தக் காணிகள் அனைத்தையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு ... (அ)

# பேசாலையில் வாள்வெட்டு; ஒருவர் வைத்தியசாலையில்

மன்னார், மே. 26

மன்னார் - பேசாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முருகன் கோவிலடி 7ஆம் வட்டார பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலத்த காயங்களுடன் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு 9 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

வாள்வெட்டுச் சம்பவத்தில் காயமடைந்தவர் அதே ஊரைச் சேர்ந்த 38 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கடந்த 23 ஆம் திகதி பேசாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனினும், வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை என பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்தனர்.

மேலும், அன்றையதினம் வாள், கத்தி, இரும்பு கம்பிகளுடன் 15 இற்கும் மேற்பட்ட நபர்கள் வந்ததாகவும் வந்தவர்கள் கடும் போதையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் தொடர்ச்சியாக இவ்வாறான சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டு வருவதாகவும் பொலிஸார் இவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை முன் வைத்துள்ளனர். (அ)

# சுவர் இடிந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 26

பெல்மடுல்ல - போபிட்டிய பிரதேசத்தில் சுவர் இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த நபர் பெல்மடுல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

உயிரிழந்தவர் போபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 வயதுக்கு உட்பட்ட 60 வீதமான குழந்தைகள் கைபேசிக்கு அடிமை!

## இலங்கை ஆய்வொன்றில் தகவல்

கொழும்பு, மே. 26

**இலங்கையில் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 60 வீத மானவர்கள் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அடிமை யாகியுள்ளதாக அண்மைய ஆய்வு ஒன்றில் தெரியவந் துள்ளது.**

தென் மாகாணத்தில் உள்ள 400 பாடசாலை மாணவர்களி டம் வைத்தியர்கள் குழு மேற் கொண்ட ஆய்வில் இது தெரிய வந்துள்ளதாக விசேட வைத்தி யர் அமில சந்திரசிறி தெரிவித் தார்.

இதன் காரணமாக பல குழந் தைகள் இரவு நேரங்களில் ஓய் வின்றியும், கவலையுடனும் இருப்பதுடன் கல்வியில் கவ னம் செலுத்த முடியாமல் இருப் பதும் தெரியவந்துள்ளது.

கையடக்கத் தொலைபேசி களுக்கு அடிமையான குழந்தை கள் நீரிழிவு நோயால் பாதிக்கப் படுவதும் கண்டறியப்பட்டுள் ளது.

அவர்களின் உடல் செயல்ப டாததால் நீரிழிவு நோய் ஏற்ப டுகிறது என்று மருத்துவர் கூறி னார்.

அவர்களும் வன்முறையாக நடந்துகொள்வதால், பெற் றோர்களால் இந்த நிலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை, மேலும் அவசியமானால் மட் டுமே தங்கள் குழந்தைகளை ஒரு நாளைக்கு ஒரு மணி நேரத் திற்கும் குறைவான நேரம் கைய டக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்த அனுமதிக்குமாறு பெற்றோர்களிடம் மருத்துவர் கள் கேட்டுள்ளனர். (அ)

# கடந்த காலத்தை நினைவில் வைத்து நாட்டு மக்கள் வாக்களிக்க வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, மே. 26

கடந்த காலத்தில் கற்றுக் கொண்ட பாடங்களை வைத் துக்கொண்டு மக்கள் எதிர்வரும் தேர்தலில் புத்திசாலித்தனமாக வாக்களிக்க வேண்டுமென ஐக் கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் எமது நாட்டின் அரசி யலமைப்பின் பிரகாரம் நடத் தப்பட வேண்டும். அதனை மாற்ற முடியாது. தேர்தல் தொடர்பில் அறிவிக்கும் பொறுப்பு தேர்தல் ஆணைக் குழுவுக்கே இருக்கிறது. எனவே அரசியல்வாதிகள் அதுதொடர் பில் முடிவெடுக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆகவே எதிர்வரும் தேர்த லின்போது வரலாற்றில் பாடம் கற்றுக்கொண்டு விழுந்த குழி யில் மீண்டும் விழாமல் புத்தி சாலித்தனமான தீர்மானம் எடுப்பது நாட்டு மக்களின் பொறுப்பாகும் என இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

அதனால் எதிர்வரும் தேர்தலில், புத்திசாலித்தனமான தீர்மானம் ஒன்றை எடுப்பது டன், தேசிய அரசியலில் குறு கிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வழங்கப்படு கின்ற வாக்குறுதிகளை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரி வித்தார். (அ)

# கத்திக்குத்து தாக்குதலில் யாழில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே. 26

அக்காவின் கணவனுக்கும், தந்தைக்குமிடையில் ஏற்பட்ட தகராற்றை விலக்கச் சென்ற இளைஞன் ஒருவர், அக்காவின் கணவரின் கத்திக்குத்து தாக்கு தலில் உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட, கொக்குவில், தாவடி பகுதியில் இந்த சம்பவம் நடந் தது.

கடந்த 2ஆம் திகதி நடந்த இந்த சம்பவத்தில் படுகாயம டைந்த இளைஞன், யாழ்ப்பா ணம் போதனா வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வந்த நிலை யில் உயிரிழந்ததாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

வரதராசா நியூட்சன் (வயது -23) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞனின் அக்காவின் கணவருக்கும்- இளைஞனின் தந்தைக்குமிடை யில் தகராறு ஏற்பட்டுள்ளது. தகராற்றை விலக்கச் சென்ற இளைஞன் மீது, அக்காவின் கணவர் கத்தியால் குத்தியுள் ளார். இளைஞனின் தந்தை மீதும் தலைக்கவசத்தால் தாக்கி யுள்ளார்.

இளைஞன் சிகிச்சை பல னின்றி உயிரிழந்துள்ளார்.

கத்திக்குத்து சம்பவத்தை தொடர்ந்து, அக்காவின் கண வனை சுன்னாகம் பொலிஸார் கைது செய்திருந்தனர். அவர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# ஜப்பானில் கருக்கலைப்பு செய்த இலங்கைக் காதல் ஜோடி கைது!

கொழும்பு, மே. 26

சட்டவிரோத கருக்கலைப்பு தொடர்பாக ஜப்பானில் இரண்டு இலங்கை மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒன்பது மாத கர்ப்பிணியாக இருந்தபோது தனது குழந்தையை கருக்கலைப்பு செய்த குற்றச்சாட் டின் பேரில் இபராக்கி மாகா ணத்தின் டொரைட்டின் ருபா சிங் லியனகே உதேஷிகா அயோமி ஜெயலத் மற்றும் அவரது காதலன் முனசிங்க சுதேஷ் டில்ஷான் டி சொய்சா ஆகியோர் கைது செய்யப்பட் டதாக இபராக்கி மாகாண பொலிசார் அறிவித்தனர்.

ஏப்ரல் 29ஆம் திகதி டி சொய் சாவின் வீட்டில் வைத்து ஜயலத் தனது குழந்தையை கருக்கலைப் பதற்காக மருந்துகளை பயன்ப டுத்தியதாக பொலிஸார் தெரி விக்கின்றனர். சந்தேக நபர்க ளான 30 வயதுடைய இருவரும் குற்றச்சாட்டை ஒப்புக்கொண் டுள்ளனர். மார்ச் மாத இறுதி யில் தோச்சிகி ப்ரிபெக்சரில் உள்ள மகப்பேறு மருத்துவரி டம் கருக்கலைப்பு செய்ய ஜெய லத் சென்றிருந்தார், ஆனால் ஜப்பானின் தாய்வழி சுகாதாரச் சட்டத்தின் கீழ் கருக்கலைப்பு செய்ய அனுமதிக்கப்பட்ட காலத்தை தாண்டியதால் மருத் துவர் மறுத்துவிட்டார்.

ஜெயலத் படித்த டோரிடில் உள்ள ஜப்பானிய மொழிப் பள்ளி உள்ளிட்ட ஆதாரங்க ளின்படி, அவர் இலங்கையில் தகவல் தொழில்நுட்பம் தொடர் பான தகுதியைப் பெற்றுள்ளார். இரண்டு வருடங்கள் படிப்பதற் காக ஏப்ரல் 2023 இல் பள்ளி யில் நுழைந்தார். பள்ளியின் விடுதியில் வசித்து வந்தார்.

கடந்த ஒரு மாதமாக அவர் எப்போதாவது உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோதி லும், வழக்கம் போல் மே 20 வரை பள்ளிக்குச் சென்றார். அதற்கு முந்தைய வாரம், ஜூன் வரையிலான காலத்திற்கான கல்விக் கட்டணத்தை செலுத் தினார். அவர் கர்ப்பமாக இருப் பதாக மாணவிகள் மத்தியில் வதந்திகள் பரவிய நிலையில், ஜெயலத்துக்கு வயிற்றில் பிரச்னை இருப்பதாக அவரது முன்னாள் அறை தோழி மறுத்துள்ளார். (அ)

# தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் அமைச்சர்கள் எண்ணிக்கை 25!

## கூறுகின்றார் விஜித ஹேரத்

கொழும்பு, மே. 26

தேசிய மக்கள் சக்தி ஆட்சி யில் அமைச்சரவை எண்ணிக்கை 25 ஆக வரையறுக்கப்படும் என வும், அமைச்சருக்கு ஆலோ சனை வழங்க சபையொன்று ஸ்தாபிக்கப்படும் எனவும் அக் கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் விஜித ஹேரத் தெரிவித் தார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சி யில் வெளிவிவகார அமைச்சர் நீங்களா என எழுப்பட்ட கேள் விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு- அவ்வாறு இன்னும் தீர்மா னிக்கவில்லை. தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பா ளரை மாத்திரமே தற்போது தெரிவுசெய்துள்ளோம். தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் பிரதமர் யார், வெளிவிவகார அமைச்சர் யார், அமைச்சரவைக்கு நியமிக் கப்படும் நபர்கள் தொடர்பில் தீர்மானம் இல்லை. எனினும், அமைச்சரவையில் எண்ணிக்கை 25 ஆகவும், இராஜங்க அமைச் சர்களின் எண்ணிக்கை 25 ஆக வும் காணப்படும்.

அமைச்சருக்கு ஆலோசனை வழங்க சபையொன்று நிறுவப் படும். அதில் துறைசார் நிபுணர் கள் இருப்பார்கள். அவர்களுக்கு சம்பளம், சலுகைகள் வழங்கப்ப டமாட்டாது. அவர்கள் தன் னார்வ அடிப்படையில் சேவை யாற்றுவார்கள்-என்றார். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்த மாற்று கட்சியினர்

கொழும்பு, மே. 26

ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப்பட்டு வரும் மக்கள் அரண் வேலைத்திட்டத் தின் பொலனறுவை மாவட்டக் கூட்டம் நேற்று சனிக்கிழமை நடைபெற்றபோது சுதந்திரக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பிரதேச அமைப் பாளர்கள் பலர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்து ஐக்கிய மக்கள் சக்தி யில் இணைந்து கொண்டனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச் சருமான நந்தசேன ஹேரத், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண் டார்.

1993 இல் வடமத்திய மாகாண சபை உறுப்பினராக கடமையாற்றிய இவர், 1994 இல் பொலனறுவை மாவட்டத் திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். மேலும், 2001 இல் உணவு வர்த்தகம் தொடர்பான பிரதி அமைச்சராகவும் பணியாற்றி னார்.

அவ்வாறே, சுதந்திரக் கட்சி யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், மகாவலி அபி விருத்தி அதிகார சபையின் முன்னாள் பணிப்பாளருமான திலக் மகலேகம்கே நேற்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

1993 ஆம் ஆண்டு வடமத் திய மாகாண சபை உறுப்பின ராக கடமையாற்றிய பின்னர், 1994 ஆம் ஆண்டு பாராளு மன்றத்திற்கு தெரிவு செய்யப் பட்ட இவர், மின்னேரிய தேர்தல் தொகுதியைப் பிரதிநி தித்துவப்படுத்தி 7 வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக கடமையாற்றினார்.

மேலும், மக்கள் விடுதலை முன்னணியின் பொலனறுவை மாநகர சபையின் வேட்பாள ரான எச். சமந்த பண்டாரவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு தனது ஆதர வைத் தெரிவிக்கும் நோக்கில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார். (அ)

# விடுமுறை பெறாமல் சேவைக்கு சமுகமளிக்காத 1,200 கடற்படையினர் சட்டபூர்வப் பதவி விலகல்!

கொழும்பு, மே. 26

விடுமுறை பெறாமல்சேவைக்கு சமுகமளிக்காதிருந்த 1,200 இற் கும் அதிகமான கடற்படையி னர், பொதுமன்னிப்பு காலத் தில் சட்ட பூர்வமாக விலகியுள் ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி முதல் கடந்த 20ஆம் திகதி வரை பொது மன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த பொது மன்னிப்பு காலம் கடற்படை சிப்பாய்க ளுக்கு மட்டுமானது எனவும், விடுமுறை பெறாமல் சென் றுள்ள கடற்படையில் உள்ள தொழில்முறை மருத்துவர்கள் மற்றும் பல் மருத்துவர்களுக்கு இந்த பொதுமன்னிப்பு காலம் பொருந்தாது எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதன்படி, விடுமுறையின்றி சென்றிருந்த 1,254 கடற்படை யினர் மற்றும் வெளிநாட்டில் உள்ள 35 கடற்படையினர் உட்பட மொத்தமாக 1,289 பேர் பொதுமன்னிப்புக் காலத் தின்போது உத்தியோகபூர்வ மாக விலகியுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
26.05.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நிலைப்பாடுகளை நேர்மையாக கூறுங்கள்

தமிழ் பொது வேட்பாளர் விடயமானது, தமிழ் தேசிய அரசியல் பரப்பில் காணப்படும் பலவீனங்களை அம்பலப்படுத்தியிருக்கின்றது. தமிழ் தேசிய கட்சிகள் என்போர் எந்தளவிற்கு பலவீனமாக இருக்கின்றனர் என்பதையும் தெளிவாகவே நிரூபித்திருக்கின்றது. தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சி வெற்றி பெறுமா அல்லது தோல்வியடையுமா என்பது வேறுவிடயம். ஒரு வேளை அந்த முயற்சி தோல்வியும் அடையலாம் - அவ்வாறு தோல்வியடைந்தால் அதற்கு ஒரேயொரு காரணம்தான் இருக்க முடியும் - அதாவது, தமிழ் தேசியத்தை முன்னிறுத்துவதாக கூறிக்கொள்ளும் அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவை தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை முன்னெடுக்க உதவவில்லை என்பதே தோல்விக்கான ஒரேயொரு காரணமாக இருக்க முடியும்.

இன்றுவரையில் தமிழ் தேசிய கட்சிகள் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் தங்களின் உத்தியோகபூர்வமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணி) மட்டுமே, தேர்தல் பகிஷ்கரிப்பை அறிவித்திருக்கின்றது - ஆனால், அந்த பகிஷ்கரிப்புக்காக அவர்கள் பெரும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதில்லை. ஏனெனில், அவ்வாறு முன்னெடுத்த பின்னரும் மக்கள் வாக்களித்துவிடுவார்கள் என்னும் அச்சமே அதற்கான காரணமாகும்.

ஏனெனில், பெரும்பான்மையான மக்கள் தேர்தலில் வாக்களிப்பார்கள் - சாதாரண மக்களை பொறுத்தவரையில், வாக்களிப்பது ஒன்றுதான், அரசியலில் பங்களிப்பதற்கு கிடைக்கும் ஒரேயொரு வாய்ப்பாகும். இதன் காரணமாகத்தான் காங்கிரஸ் பகிஷ்கரிப்பு தொடர்பில் பேசிய போதும், அதனை எவருமே பொருட்படுத்தவில்லை. தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தார்கள். ஆனால், தேர்தலை பகிஷ்கரிக்கும் கோரிக்கையை பொருட்படுத்தவில்லை. இதற்கு பின்னரும் பகிஷ்கரிப்பு தொடர்பில் பேசுவதானது, அரசியல் அறிவுக்குறைபாடாகவே இருக்க முடியும். ஆனால், ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்தி, அவருக்கு வாக்களிக்குமாறு கூறும் போது நிச்சயம் மக்கள் வாக்களிப்பார்கள். ஆனால், அதற்காக அனைவரும் ஒற்றுமையுடன் பணியாற்ற வேண்டும்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி வழமைபோல் அதன் நழுவலான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது. ஆரம்பத்தில, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை, கொள்கைரீதியாக ஆதரிப்பதாக கூறியிருந்த ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளில் சிலவும் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வில்லை. தடுமாற்றமான பதிலையே தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத் தும் தீர்மானம் ஒரு தமிழ் தேசிய நிலைப்பாடாகும். இதன்மூலம் தமிழ் மக்களை பெருமெடுப்பில் வாக்களிக்க வைக்க முடியுமா அல்லது முடியாதா என்னும் சந்தேகம் அவசியமற்றது. ஏனெனில், கடந்த மூன்று ஜனாதிபதி தேர்தல்களின்போது, தங்களின் வேண்டுகோளுக்கு இணங்க மக்கள் வாக்களித்தனர் எனக் கூறிக் கொள்வோர், எவ்வாறு மக்கள் மீது சந்தேகம் கொள்ள முடியும்? எனவே இங்கு பிரச்னை வேறு - அதாவது, தமிழ் மக்கள் சார்ந்து தீர்மானகரமான முடிவுகளை மேற்கொள்வதற்கு தமிழ் தேசிய கட்சிகள் தயங்குகின்றன? எதனால் இந்தத் தயக்கம்? இதற்கு பின்னால் இருக்கின்ற காரணங்கள் என்ன? நிச்சயமாக தமிழ் மக்கள் நலன்சார்ந்து, எந்தவொரு காரணமும் இருக்க வாய்ப்பில்லை.

எனவே தமிழ் தேசிய கட்சிகள் என்போர் - குறிப்பாக இலங்கை தமிழ் அரசுக் கட்சி அதேபோன்று, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி யில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும், தமிழ் வேட்பாளர் தொடர் பில் தங்களின் தனியான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். அது ஆதரவாகவும் இருக்கலாம் அல்லது எதிராகவும் இருக்கலாம் - எதுவாக இருப்பினும் மக்களுக்கு தங்களின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.

# கைதான ஐ.எஸ்.ஐ.எஸ் நபர்களுடன் பல இலங்கையர்களுக்கு தொடர்பு?

கொழும்பு, மே. 26

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் எனும் சந்தேகத்தில் இந்தியாவில் கைதான நான்கு இலங்கையர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த மேலும் சிலரின் தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அதன்படி, ஐ.எஸ்.ஐ.எஸ் உறுப்பினர்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் மாளிகாவத்தைப் பகுதியில் வைத்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைய இந்த தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவில் கைது செய்யப்பட்ட நான்கு நபர்களுடன் நாட்டினுள் தொடர்பு வைத்திருந்த நபர்கள் தொடர்பில் ஏற்கனவே தனியான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த ஒருவர் மாளிகாவத்தையில் வைத்து பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரே சம்பந்தப்பட்ட நால்வருக்கும் விமானச் சீட்டு வழங்குவது உள்ளிட்ட பல்வேறு உதவிகளை செய்து வந்துள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் தற்போது பயங்கரவாத புலனாய்வு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான நிஹால் தல்துவ மேலும் தெரிவித்தார்.

(அ)

# வைகாசிப் பெருவிழா நிகழ்வு இன்று

வடமராட்சி, மே. 26

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டு பேரவை நடத்தும் வைகாசிப் பெருவிழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆச்சிரமமண்டபத்தில் இடபெறவுள்ளது.

ஓய்வு நிலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவார். தொடர்ந்து ஏழாலை ஸ்ரீமுருகன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனமும் நெல்லை முருகன் அறநெறிப்பாசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் தொடர்ந்து சொல்லின் செல்வர் இராசெல்வவடிவேல் தலைமையில் நவீன தொழில்நுட்ப சாதனங்கள் மனித வாழ்வுக்கு வாழ்வளிக்கின்றது - வாழ்வளிக்கவில்லை என்ற தலைப்பில் பட்டி மன்றமும் இடம் பெறவுள்ளது.

இறுதியாக யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் அரங்காற்றுகை பீட விரிவுரையாளர் சிதம்பரம் சிவமைந்தன் குழுவினருடைய இன்னிசை கான நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-2)

# விகாரைக்குச் சென்ற பெண் மாயம்!

கொழும்பு, மே. 26

களுத்துறை போதி விகாரைக்குச் சென்ற பெண் ஒருவர் காணாமல் போன சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித் தனர்.

களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த தரங்கி நிலுஷா என்ற 25 வயது பெண்ணொருவரே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

இவர் கடந்த 22 ஆம் திகதி காலை உறவினர்களுடன் இணைந்து களுத்துறை போதி விகாரைக்குச் சென்ற இவர், தனது 2 வயது குழந்தையை உறவினரொருவரிடம் கொடுத்துவிட்டு மலசலக்கூடத்துக்குச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், இவர் நீண்ட நேரமாகியும் மீண்டும் திரும்பி வராததால் உறவினர்கள் அனைவரும் இவரைத் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், காணாமல்போன பெண்ணின் தந்தை இது தொடர்பில் அவரது கணவரிடம் தெரிவித்ததையடுத்து இந்தப் பெண்ணின் கணவர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போனவர் 5 அடி உயரம் உடையவர் என்பதுடன் சம்பவத்தின் போது இவர் நீல நிற காற்சட்டையும் வெள்ளை நிற சட்டையும் அணிந்திருந்ததாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 26

ஹினிதும, கும்புரேகொட பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என ஹினிதும பொலிஸார் தெரிவித்தனர்.

ஹினிதும, கும்புரேகொட, ஹபரகடை பிர தேசத்தைச் சேர்ந்த 34 வயது நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர், தனது வீட்டில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததால் அயல் வீட்டிலிருந்து மின்சார இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக அங்குச் சென்றிருந்தபோது இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் மெதகம வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட வேளை அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்காக கராப்பிட்டிய வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகைப் பாதிக்கும் விவகாரங்கள் தீர்க்கப்பட வேண்டும்!

ஒருபக்கம் காஸா போர் தீவிரமடைந்திருக்கும் நிலையில், இன்னொரு புறம் உக்ரைன் போர்ச் சூழலும் உச்சகட்டத்தை எட்டியிருப்பது, அமெரிக்கா - சீனா இடையில் மீண்டும் வர்த்தக மோதல் துளிர்த்திருப்பது, ஸ்லோவாகியா பிரதமர் மீதான படுகொலை முயற்சி என அடுத்தடுத்த நிகழ்வுகள் சர்வதேச அளவில் கவனம் ஈர்த்திருக்கின்றன.

2022 பிப்ரவரி முதல் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்திவரும் நிலையில், அந்நாட்டின் இரண்டாவது பெரிய நகரான கார்கிவில் நுழையும் முயற்சியை ரஷ்யப் படைகள் தீவிரப்படுத்தியிருக்கின்றன. சர்வதேச எல்லையைக் கடந்து, கார்கிவ் நகரின் புறநகர் கிராமங்களைக் கைப்பற்றியிருக்கும் ரஷ்யப் படைகள் அந்நகரை நோக்கி முன்னேறிவருகின்றன.

நிலைமை மோசமாகிவருவதால், தனது வெளிநாட்டுப் பயணங்களை ரத்துசெய்திருக்கும் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, தற்காப்பு வியூகங்களை வகுப்பதில் முனைந்திருக்கிறார். மேற்கத்திய நாடுகள் - குறிப்பாக - அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்கள் கிடைக்காத நிலையில், உக்ரைனின் நிலை கவலைக்குரியதாகி இருக்கிறது.

இந்தச் சூழலில், சமீபத்தில் உக்ரைன் சென்றிருந்த அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆன்டனி பிளிங்கன், உக்ரைனுக்கு விரைவில் ஆயுதங்கள் அனுப்பப்படும் என உறுதியளித்திருக்கிறார்.

இதற்கிடையே, தனது நட்பு நாடான சீனாவுக்கு இரண்டு நாள் பயணமாகச் சென்றிருந்த ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் சீன அதிபர் ஷி ஜின்பிங்குடன் இணைந்து அளித்த கூட்டறிக்கையில், உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு, முதலில் அரசியல்ரீதியான தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தியிருக்கிறார்.

மே முதல் வாரத்தில் பிரான்ஸ், செர்பியா, ஹங்கேரி ஆகிய நாடுகளுக்குச் சீன அதிபர் ஷி ஜின்பிங் சுற்றுப் பயணம் சென்றிருந்தபோது, உக்ரைன் போரில் ரஷ்யாவுக்குச் சீனா ஆயுதம் வழங்குவதை நிறுத்த வேண்டும் என மேற்கத்திய நாடுகள் அழுத்தம் கொடுத்தன. ஆனால், ரஷ்யாவுக்கு ஆயுதம் வழங்கப்படுவதாகச் சொல்லப்படுவதைச் சீனா மறுத்திருக்கிறது.

இந்தப் பிரச்சினைகளுக்கு நடுவில், ஸ்லோவாகியா பிரதமர் ராபர்ட் ஃபிகோவைப் படுகொலை செய்ய முயற்சி நடந்திருப்பது மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. ரஷ்ய ஆதரவு நிலைப்பாடு கொண்ட ஃபிகோ, உக்ரைன் போரில் மேற்கத்திய நாடுகளின் எண்ணத்துக்கு மாறாகச் செயல்பட்டவர். உக்ரைனுக்கு ஆயுதங்கள் அனுப்ப மறுத்ததுடன் அந்நாட்டைப் பற்றிப் பகிரங்கமாக விமர்சித்தவர்.

அவரைச் சுட்டுக்கொல்ல முயற்சித்த 71 வயது யூராய் சின்டுலாவின் பின்னணியில், சர்வதேச சக்திகள் இருப்பதாக இதுவரை நிரூபிக்கப்படவில்லை. எனினும், ஃபிகோவின் ரஷ்ய ஆதரவு நிலைப்பாடு, ஸ்லோவாகியாவில் பிளவை ஏற்படுத்தியிருப்பது சின்டுலாவின் கோபத்துக்குக் காரணமாகக் கூறப்படுகிறது. போரின் விளைவாக ஏற்படும் பாதிப்புகளில் இதுவும் ஒன்று.





உலக வர்த்தகத்துக்கு இறக்குமதிகள் அத்தியாவசியமானவை என்பதால், அமெரிக்கா-சீனா இடையிலான வர்த்தக மோதல், உலக அளவில் வர்த்தகச் சங்கிலியைப் பாதிக்கக்கூடும் என்கிற அச்சம் எழுந்திருக்கிறது.

போதாக்குறைக்கு அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் வர்த்தகப் போட்டி மீண்டும் முளைத்திருக்கிறது. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எஃகு, அலுமினியம், மின்சார வாகனங்கள் உள்ளிட்டவற்றுக்கு அதிக வரி விதித்திருக்கிறது ஜோ பைடன் அரசு. முந்தைய அதிபர் டொனால்டு டிரம்ப், சீனாவுடன் நடத்திய வர்த்தகப் போர் கடும் விமர்சனங்களை எதிர்கொண்ட நிலையில், அதே பாணியில் பைடனும் இறங்கியிருப்பது பேசுபொருளாகியிருக்கிறது.

உலக வர்த்தகத்துக்கு இறக்குமதிகள் அத்தியாவசியமானவை என்பதால், அமெரிக்கா-சீனா இடையிலான வர்த்தக மோதல், உலக அளவில் வர்த்தகச் சங்கிலியைப் பாதிக்கக்கூடும் என்கிற அச்சம் எழுந்திருக்கிறது. போரும் வர்த்தக மோதல்களும் சம்பந்தப்பட்ட நாடுகளை மட்டுமல்லாமல், உலகையே பல்வேறு விதங்களில் பாதிக்கக் கூடியவை. சம்பந்தப்பட்ட தலைவர்கள் இதை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்!

**- எஸ். ஆர்.**

## இந்தவார ராசிபலன் 26.05.2024 - 01.06.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 13
நல்ல நேரம்: 7.30 - 08.30 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : திரிதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் தெய்வ வழிபாடுகளில் ஈடுபாடு அதிகரிக்கும். கற்பனை வளம் பெருகும். பிரயாணத்தில் மகிழ்ச்சி நிலவும். நல்ல தகவல்கள் வந்து சந்தோஷம் தரும். மேலதிகாரிகள் உங்கள் சிறந்த பணி கண்டு மகிழ்வதோடு பாராட்டும் அளிப்பர். சிலர் பக்தி சொற்பொழிவு கேட்டு ஞானத்தன்மை பெறுவர். காரியத் தடைகள், சுறு சுறுப்பு இல்லாத நிலையை உருவாகும். வாழ்க்கையில் எதிர்பாராத முன்னேற்றங்கள் ஏற்படும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் பெண்களுக்கு அழகிய ஆடை ஆபரண சேர்க்கை ஏற்படும். சிலருக்கு வீடு, தொழில் அல்லது இடமாற்றம் ஏற்படலாம். வியாபாரிகள் வாடிக்கையாளர்கள் ஆதரவு பெற்று எதிர்பார்ப்புக்கு மேலாக விற்பனையால் இலாபத்தை அள்ளுவார்கள். தொழிலில் நவீன உபகரணங்கள் நிறுவுவது போன்ற விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். சிலருக்கு சோம்பல் கூடி, மனோபயம் அதிகரிப்பதால் தங்கள் பணிகளை சரிவர செய்யாமல் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவர். பெண்கள் அகமகிழ்வார்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் சிலர் வீண் வார்த்தைகள் பேசுவதன் மூலம் வேண்டாத பகையை தேடிக் கொள்வார். அனைத்து விஷயங்களிலும் அரசு மூலம் எதிர்பார்த்த ஆதாயங்கள் அதிகாரிகளின் ஒத்துழைப்பு எளிதாகக் கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் கடமையுணர்வுடன் கூடிய செயல்பாட்டால் மேலதிகாரிகளின் ஆதரவு மூலம் பதவி உயர்வு பெற முற்படுவீர்கள். மாணவர்களின் கடின உழைப்பின் காரணமாக படிப்பில் ஏற்படும் ஆர்வம் காரணமாக நல்ல மதிப்பெண்கள் பெற்று ஆசிரியரின் பாராட்டுதல்களை பெறுவர்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் திருமணம் ஆகாத பெண்களுக்கு நல்ல இடத்தில் திருமண ஏற்பாடுகள் நடக்கும். மாணவர்களுக்கு வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்குக் கடமையுணர்வுடன் அவர்கள் செய்த சீரிய பணிக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். வியாபாரம் மற்றும் தொழில் வாக்கு வன்மையால் வருமானம் பெருகும். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் உங்களுக்கு அனுகூலங்கள் மிக்க வாரம். மனைவி மற்றும் குழந்தைகளின் அன்பால் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். பெரியோரின் ஆதரவும் உதவியும் கிடைக்கும். அதன் காரணமாக உங்கள் பல நாள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். தொழில் அபிவிருத்திக்காக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். அதற்குத் தேவைப்படும் அரசு உதவிகள் மற்றும் வங்கி கடன்கள் அனைத்தும் கிடைக்க நல்ல வழி பிறக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு ஏற்றமிகு வாரம். சிலருக்குப் பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம். எதிர்பாராத தனவரவு மனம் மகிழும். போட்டி, பொறாமைகளை அகற்றி தன்னம்பிக்கையோடு செயல்பட்டால் முன்னேற்றங்கள் சுலபமாகும். சிலர் பழைய கடன்களை அடைத்து புதிய கடன்கள் வாங்க முயல்வீர்கள். உயர் அதிகாரிகளின் உந்துதலால் ஏற்படும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு எதிர்பாராத தன வரவுகள் ஏற்படும். தீவிரமான உழைப்பின் காரணமாக திட்டமிட்டபடி உங்கள் பணியில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எளிதில் அடைவீர்கள். அதன் காரணமாக உங்கள் சீரிய பணி மற்றவர்களின் பாராட்டப் பெறும் என்றால் மிகையாகாது. சிலருக்கு மற்றவர்களை ஆணையிடும் இடத்தில் அதிகாரம் மிக்க அரசு உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு இனி நல்ல காலம் பிறக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் செலவுகள் அதிகமாகும், ஆதலால் பணமுடையும் இருக்கும். வேலையில் அதிக சிரத்தையும், கடின உழைப்பு எப்போதும் உங்கள் பையை பணத்தால் நிரப்பும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தார் மூலம் உதவிகள் தடைப்படாது. எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். புதிய பெண்களிடம் பேசும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் பேசவும். பயணங்கள் மேற்கொள்ள நேரும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் அதிகாரிகள் தயவால் அனுகூலமான பலன்கள் அடைவர். தொழிலாளர்களுக்கு உழைப்பு அதிகமாகி. அதற்கேற்ற இலாபமோ, பலனோ கிடைக்காது. சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். முன்னெச்சரிக்கையாக மருத்துவ பரிசோதனைகள் செய்து கொள்வது நல்லது. உங்கள் செயல்திறன் அதிகரிகரித்துச் செல்வாக்கும் பெருகும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் பல வழிகளிலும் தன வருமானம் கூடுதலாக இருக்கும். மனைவியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் உங்கள் அனுசரணையால் சீர்படும். சிறந்த எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தொழிலில் தீட்டப்படும் புதிய திட்டங்கள் அரசின் உதவியோடு சிறப்பாக முடிக்கப்படும். அன்பான உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், அதிகச் செலவுகளும் ஏற்படும். நண்பர்களுடன் வாக்குவாதம் செய்யாதிருப்பது நட்பை பலப்படுத்தும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் தாராளமான தனவரவு இருக்கும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். உயர் அதிகாரிகளிடம் பணிவுடன் நடப்பது பதவி உயர்வுக்கு உறுதுணையாக இருக்கும். வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு இலவச பரிசுகள் கொடுத்து வியாபாரத்தை மேலும் பெருக்கிக் கொள்வர். நெடுநாளாகப் பிரிந்த தம்பதிகள் இணைந்து மகிழ்வர். பரம எதிரிகள் திட்டங்களை, திறமையாக மற்றும் சமயோஜிதமாக செயல்பட்டு முறியடிப்பீர்கள். குடும்பத்தில் சுப காரியங்களுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பணவரவு அதிகரிப்பதால் மனக்களிப்பு கூடும் வாரம். உங்கள் புதிய முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். புனித பயணங்கள் மேற்கொள்வீர்கள். எல்லோருடனும் பழகும் உங்கள் சகஜமான பழக்கத்தால் விஐபிகளின் நட்பு உருவாகும். அவர்கள் மூலமாக ஆதாயங்கள் பெறும் நிலையும் ஏற்படும். அதன் காரணமாக சந்தோஷங்கள் நிலவும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண ஏற்பாடுகள் நடக்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலை உருவாகி வெற்றியும் கிட்டும். அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு உயர் பதவிகளுக்கான வாய்ப்புகள் பெருகும். தோஷங்கள் நீங்கி நோய்கள் அகலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் வெற்றிவாய்ப்பு அதிகரிக்கின்றதா?

நியூசிலாந்து
சிற்சபேசன்

இந்தியப் பாராளுமன்றத் தேர்தலின் வாக்குப்பதிவு, ஏப்ரல் 19ல் ஆரம்பமாகி, ஏழுகட்டங்களாக நடைபெறுகின்றது. ஜூன் 1ல் வாக்குப் பதிவு பூர்த்தியடைகின்றது. அதனைத் தொடர்ந்து, ஜூன் 4ல் முடிவுகள் வெளியாகின்றன.

தற்போது ஆட்சியிலுள்ள பாரதிய ஜனதாக் கட்சியும், காங்கிரஸ் கட்சியுமே தேசியமட்டத்திலே பெரிய கட்சிகளாகக் காணப்படுகின்றன. ஆனாலும்கூட, அவை தனிக்கட்சிகளாகத் தேர்தலை எதிர்கொள்ளவில்லை. "என்.டி.ஏ" என்று சொல்லப்படுகின்ற தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு பாரதிய ஜனதாவும், "இண்டியா" கூட்டணிக்கு காங்கிரசும் தலைமைவகிப்பதாகப் பெருவெட்டில் சொல்லலாம்.

கடந்த இரண்டு பொதுதேர்தல்களிலும் பாரதிய ஜனதாக் கட்சியே வெற்றியீட்டியது. அதனுடைய தொடர்ச்சியாக, மூன்றாவது பொதுத்தேர்தலிலேயும் வெற்றியைச் சுவைக்க ஆலாய்ப்பறக்கின்றது.

மறுவளத்தில், சுதந்திர இந்தியாவிலே பெருமளவுகாலத்தை காங்கிரஸ் கட்சியே ஆட்சிசெய்திருக்கின்றது. அத்தகைய பாரம்பரியமுடைய கட்சியினுடைய நிலையே, தற்போது, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகியுள்ளது.

2009ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலேயே காங்கிரஸ் கட்சி கடைசியாக ஆட்சிப்பீடமேறியது. அந்த தேர்தலிலே, 440 வரையான வேட்பாளர்களைக் காங்கிரஸ் களமிறக்கியது. அதிலே 206 வரையானவர்களே வெற்றியீட்டினர். அதுவே, அண்மைக்காலத்திலே காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்த சொல்லிக்கொள்ளும்படியான தேர்தல் வெற்றியாகவும் ஆகிவிட்டது.

2009லே காங்கிரஸ் தனித்து 206 ஆசனங்களை வென்றபோது, பாரதிய ஜனதா தனித்து 116 ஆசனங்களை வென்றது. அதன்பின்னர், 2014லே பாரதிய ஜனதா தனித்து 282 ஆசனங்களை வென்றபோது, காங்கிரஸ் தனித்து 44 ஆசனங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. அதனைத் தொடர்ந்து, 2019லே பாரதிய ஜனதா தனித்து 303 ஆசனங்களை வென்றபோது, காங்கிரஸ் தனித்து 52 ஆசனங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.




இவ்வாறாக காங்கிரஸ் கட்சியின் தேர்தல் தோல்விகள் தொடர்கதையாகின. அதனால், கட்சியினுடைய கட்டமைப்புக் குலையத் தொடங்கியது. வற்றிய குளத்திலிருந்து பறந்துபோகின்ற பறவைகள் போன்று, காங்கிரஸ் கட்சியிலே, பெயர் சொல்லிக்கொள்ளக் கூடிய தலைவர்கள் பாரதிய ஜனதாக் கட்சிக்குத் தாவிக் கொள்ள ஆரம்பித்தனர்.

இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், குஜராத், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், இமாச்சலப் பிரதேசம், ஹரியாணா, கோவா, உத்தராகண்ட், அசாம் போன்ற மாநிலங்களிலேயே பாரதிய ஜனதாக் கட்சியுடன் நேரடிப் போட்டியில் காங்கிரஸ் கட்சி உள்ளது. இந்த மாநிலங்களிலே 140 வரையான பாராளுமன்றத் தொகுதிகள் உள்ளன. அதிலே 90விழுக்காடு வரையான வற்றிலே பாரதிய ஜனதாக் கட்சியே கடந்த தேர்தலிலே வெற்றி பெற்றது.

"ஹிந்தி பெல்ட்" என்று சொல்லப்படுகின்ற உத்தரப்பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியின் தொய்வு துல்லியமாகத் தெரிகின்றது. இவ்விரண்டு மாநிலங்களிலுமே 120 வரையான பாராளுமன்றத் தொகுதிகள் உள்ளன. பாரதிய ஜனதாக் கட்சியும், காங்கிரஸ் கட்சியும் இந்த இரண்டு மாநிலங்களிலே தனித்துப் போட்டியிடவில்லை. பிராந்தியக் கட்சிகளுடன் வலுவான கூட்டணியை அமைத்துள்ளன. அதிலே, தேசிய ஜனநாயக கூட்டணியின் திட்டவட்டமான தலைமை பாரதிய ஜனதாக் கட்சியிடமே காணப்படுகின்றது. மறுவளத்தில், "இண்டியா" கூட்டணியில் காங்கிரஸ் கட்சியின் தலைமை சொல்லிக் கொள்ளும்படி தெளிவாகத் தெரியவில்லை.

டெல்லிக்கு ராசாவாக வேண்டுமெனில், "ஹிந்தி பெல்ட்" உள்ளிட்ட வடமாநிலங்களில் ஒரு கட்சி பலமாக இருக்கவேண்டும். அண்ணளவாக ஐம்பது விழுக்காடு பாராளுமன்றத் தொகுதிகள் அங்கே உள்ளன.

2019 தேர்தலிலே தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப் போன்ற மாநிலங்களிலிருந்தே காங்கிரஸ் கட்சிக்கு சொல்லிக்கொள்ளக்கூடிய வெற்றி கிடைத்திருந்தது. வடமாநிலங்களிலே காங்கிரஸ் படிப்படியாக சோபை இழந்தே வந்திருக்கின்றது. அதனால் தேர்தல் வெற்றி வசப்படவில்லை.

கடந்த பொதுதேர்தலில், 15 வரையான மாநிலங்களில் காங்கிரஸ் ஒற்றை ஆசனத்தைக்கூட பெற முடியவில்லை. இரட்டை இலக்கத்திலேயான தொகுதிகளிலே வெற்றி என்பது கேரளாவில் மட்டுமே சாத்தியமாகியது. ஒருமாநிலம் அல்லது, யூனியன் பிரதேசமொன்றில் பதிவாகிய மொத்த வாக்குகளில் ஐம்பது விழுக்காடு பாண்டிச்சேரியில் மட்டுமே காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்திருந்தது.

அந்தவகையிலே காங்கிரஸ் கட்சியின் சரிவு துல்லியமாகத் தெரிகின்றது. கடந்த இரண்டு பொதுத்தேர்தலிலும் கற்றுக்கொண்டவைகளிருந்து புதிய அணுகுமுறையை காங்கிரஸ் கட்சி தற்போதைய தேர்தலிலே பரிசோதிக்கின்றது.

பாரதிய ஜனதாக் கட்சியை நேரடியாகத் தனித்து எதிர்கொள்ள முடியாது என்னும் யதார்த்தம் காங்கிரஸ் கட்சிக்கு உறைத்திருக்கின்றது. அதனாலேயே, பிராந்தியக் கட்சிகளுடன் "விட்டுக்கொடுப்புக்களுடன்" கூட்டணி அமைத்திருக்கின்றது.


இன்னுமொருவகையிலே சொல்வதானால், எல்லாத் தொகுதிகளிலும் போட்டியிடுவதற்கு வேட்பாளர்களைத் தேடுவதே காங்கிரஸ் கட்சிக்கு சவாலகியிருக்கின்றது. அத்தகையதொரு சூழ்நிலையில், பிராந்தியக் கட்சிகளுடன் கைகோர்ப்பதைத் தவிர வேறு தெரிவு இருக்கவில்லை என்பதுவும் யதார்த்தமாகும்.

உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், பீகார், தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலேயும் வலுவான பிராந்தியக் கட்சிகளுடன் காங்கிரஸ் கட்சி கைகோர்த்திருக்கின்றது.

300வரையான தொகுதிகளிலே மட்டுமே காங்கிரஸ் நேரடியாகப் போட்டியிடுகின்றது. அதிக தொகுதிகளைப் பிராந்தியக் கட்சிகளுக்கு விட்டுக்கொடுத்திருக்கின்றது. 1951ம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வளவு குறைந்த எண்ணிக்கையிலான தொகுதிகளில், காங்கிரஸ், நேரடியாகப் போட்டியிடுவது இதுவே முதல்முறையாகும்.

அந்தவகையிலே காங்கிரஸ் கட்சியின் அணுகுமுறையில் மாற்றத்தைக் காணமுடிகின்றது. குறைந்தபட்ச தொகுதிகளில் போட்டியிட்டுக்கொண்டு, பாரதிய ஜனதாக் கட்சிக்கு சவால் விடக்கூடிய வேட்பாளர்களை ஆதரிக்கின்றது. அதனால், கடந்த இரண்டு பொதுத்தேர்தல்களுடன் ஒப்பிடுகையில், காங்கிரஸ் கட்சியினுடைய வெற்றிவாய்ப்பு அதிகரித்திருப்பதாகவே தெரிகின்றது.

# ஈரான்: அதிபரின் மரணமும் அரசியல் எதிர்காலமும்



ஈரான் அதிபர் இப்ராஹிம் ரெய்சி ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்திருப்பது வருத்தத்துக்குரியது. காஸா மீதான இஸ்ரேலின் தொடர் தாக்குதலை ஒட்டி, மேற்காசியாவில் பதற்றச் சூழல் நிலவிவரும் நேரத்தில் இந்த விபத்து நிகழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஈரானில் அதிகபட்ச அதிகாரம் கொண்ட தலைமை மதகுருவான அயத்துல்லா அலி கமேனியின் நம்பிக்கையைப் பெற்றவர் ரெய்சி. இவருக்கு முன்பு இரண்டு முறை அதிபராக இருந்த மிதவாதியான ஹஸன் ரூஹானி 2015இல் அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளுடன் அணுசக்தி ஒப்பந்தங்களை மேற்கொண்டார்.

ஆனால், டொனால்டு டிரம்ப் அமெரிக்க அதிபரான பிறகு 2018 இல் அணுசக்தி ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டதோடு, ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தார். இதனை மிதவாதிகளின் தோல்வியாக முன்னிறுத்திய மதகுருக்களும் பழமைவாதிகளும் ரெய்சி அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் ஈரான் அரசு நிர்வாகத்தின் மீதான தமது பிடியை வலுவாக்கிக்கொண்டனர்.

ரெய்சி அதிபரானவுடன் ஈரானில் சிவில் உரிமைகள் ஒடுக்கப்பட்டன. சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுடனான ஈரானின் உறவுக்கு வலுவூட்டப்பட்டது. ஹமாஸ், ஹெஸ்பொல்லா போன்ற அரசுசாரா ஆயுதக் குழுக்களுக்கான நிதி உதவி கணிசமாக அதிகரிக்கப்பட்டது. ஈரானின் அணுசக்தித் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

மூன்று ஆண்டுகளுக்குள் ஈரானின் வலிமையான தலைவராக உயர்ந்தார் ரெய்சி. கமேனிக்குப் பிறகு ரெய்சியே அடுத்த தலைமை மதகுருவாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

அமெரிக்கா விதித்துள்ள தடைகள் உள்ளிட்ட காரணங்களால் ஈரானின் பொருளாதாரம் மோசமான நிலையில் உள்ளது. சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் உள்ள ஈரான் துணைத் தூதரகத்தின் மீது இஸ்ரேல் நிகழ்த்திய வான்வழித் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக ஏப்ரலில் இஸ்ரேல் மீது ஈரான் முதல் முறையாகத் தாக்குதல் நடத்தியது.

இதில் ரெய்சியின் 'எதிர்த்துத் தெறி...

...விக்கும்' மனப்பான்மைக்கு முக்கியப் பங்கிருப்பதாகக் கூறப்படுகிறது. இரு நாடுகளுக்கும் இடையில் போர் மூளவில்லை என்றாலும், பதற்றச் சூழல் தொடர்கிறது. இந்த நேரத்தில் நிர்வாகத்தில் தேர்ச்சியும் நெருக்கடிகளைக் கையாள்வதில் அனுபவமும்மிக்க ரெய்சி போன்ற தலைவரை ஈரான் இழந்திருப்பது துரதிர்ஷ்டவசமானது.

இந்த விபத்துக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகளின் அதிகாரிகள் தெரிவித்துள்ள நிலையில், விபத்துக்கான காரணத்தையும் பின்னணியையும் விரைவாக ஈரான் கண்டறிந்து அறிவிக்க வேண்டும். அதன் மூலமாகவே விபத்து தொடர்பான சதிக் கோட்பாடுகள், மேற்கு ஆசியாவில் பதற்றச் சூழலைத் தீவிரப்படுத்துவது தவிர்க்கப்படும்.

இப்போது ஈரான் துணை அதிபர் முகமது மோக்பேர் பொறுப்பு அதிபராகப் பதவியேற்றுள்ளார். விரைவில், புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் சரியான முறையில் நடத்தப்பட்டு, எந்தச் சிக்கலும் இல்லாமல் அதிகார மாற்றம் நிகழ வேண்டும்.

மேற்காசியாவில் நிலவிவரும் போர்ப் பதற்றத்தின் எதிர்மறைத் தாக்கத்திலிருந்தும் உள்நாட்டுப் பிரச்சினைகளிலிருந்தும் ஈரான் விடுபட, அந்நாட்டு மக்களின் உண்மையான ஆதரவையும் நம்பிக்கையும் பெற்றவர் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படுவது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ஞானசாரவை மன்னித்து விடுதலை செய்தால் தவறான செய்தி சமூகத்தைச் சென்றடையும்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை இரு மாதங்களுக்கு முன்னர் கொழும்பு மேல் நீதிமன்றம் சிறைக்கு அனுப்பியபோது அவரை சாத்தியமானளவு விரைவாக வெளியில் எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பது ஒன்றும் எதிர்பார்க்கப்படாதது அல்ல.

அவர் சிறைக்குச் சென்று முழுமையாக இரு மாதங்கள் கூட கடந்துவிட முன்னதாக வெசாக் பண்டிகையை முன்னிட்டு அவருக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு இலங்கையின் மூன்று முக்கிய பௌத்த உயர்பீடங்களினதும் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கூட்டாக கடிதம் எழுதியிருக்கிறார்கள்.



இந்த செய்தி வெளியானதற்கு மறுநாளே வெசாக் பண்டிகையை முன்னிட்டு விடுதலை செய்யப்படும் சிறைக்கைதிகளின் பட்டியலில் ஞானசார தேரரின் பெயர் இல்லை என்ற செய்தியும் வெளியானது. அதனால் தற்போதைக்கு அவர் வெளியில் வருவதற்கு சாத்தியம் இருப்பதாக தெரியவில்லை. வேறு எவராவது ஜனாதிபதியாக இருந்திருந்தால் சிலவேளை ஞானசார கடந்தவாரம் சிறையில் இருந்து விடுதலை செய்ப்பட்டிருக்கக்கூடும். ஆனால் தற்போதைய ஜனாதிபதி இது விடயத்தில் அவசரம் காண்பிக்கக்கூடிய சாத்தியமில்லை என்றே தெரிகிறது. ஆனால் ஜனாதிபதி தேர்தல் நெருங்கும்போது அவர் எவ்வாறு நடந்துகொள்வார் எனபதையும் உறுதியாகக் கூறமுடியவில்லை.

ராஜபக்சாக்களின் ஆட்சிக்காலத்தில் சில சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவை எழுத்தில் போட முடியாத வார்த்தைகளில் விமர்சனம் செய்ததை இப்போது ஞானசார சிறைக்குள் இருந்து நினைத்துப் பார்க்காமல் இருக்கமுடியாது. அவரை அவ்வாறு அவமதித்ததையும் இன்று அவரிடமே மன்னிப்பை எதிர்பார்த்து நிற்கவேண்டிய நிலை தனக்கு ஏற்பட்டிருப்பதையும் ஞானசார சிறைக்குள் இருந்து சிந்தித்துப் பார்த்து தன்னைத்தானே நொந்துகொள்வார் என்பது நிச்சயம்.

ஞானசாரவுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை அவர் சிறைக்குச் சென்ற சில தினங்களுக்கு உள்ளாகவே இராஜாங்க அமைச்சர் ஒருவரினால் முன்வைக்கப்பட்டது. ஆனால் அவரின் வேண்டுகோள் பொதுவெளியில் பெரிதாக கவனத்தைப் பெறவில்லை.

ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் ஞானசாரவைப் பற்றி மகாநாயக்க தேரர்கள் கூறியிருக்கும் கருத்துக்களை அவரைப் பற்றி பொதுவில் மக்கள் மத்தியில் இருக்கும் அபிப்பிராயங்களின் பின்னணியில் நோக்குவதற்கு பலரும் தவறியிருக்க மாட்டார்கள் என்று நம்பலாம்.

ஞானசார சிங்கள பௌத்த இனத்துக்காக குரலெழுப்பிய அதேவேளை தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் தொடர்பில் பாதுகாப்பு படைகளுக்கு முக்கியமான தகவல்களைக் கொடுத்தவர் என்று மகாநாயக்க தேரர்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.


'இலங்கையில் சகலருக்கும் பொதுவான சட்டமுறைமையை (ஒரு நாடு, ஒரு சட்டம் ) நிறுவுவதற்காக அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவராகச் செயற்பட்ட ஞானசார பெறுமதியான யோசனைகளை முன்வைத்தவர். அவர் தேசிய ஐக்கியம் தொடர்பில் நல்ல புரிந்துணர்வுடன் செயற்பட்டவர். குறிப்பிட்ட சில சிங்கள தேசியவாத அமைப்புக்களில் முக்கியமான பங்கை வகித்த அவர் சமூகத்தின் இதயங்களை வென்றெடுக்கவும் சமூக ஒருங்கிணைப்புக்காவும் பாடுபட்டவர்" என்று மகாநாயக்கர்கள் கடிதத்தில் மேலும் கூறியிருக்கிறார்கள்.

ஞானசார சிறைக்குச் சென்றிருப்பது இது முதற்தடவை அல்ல. பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலிகொடவை கடத்தியதாக இராணுவ புலனாய்வு பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை எட்டு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஹோமகம மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்குள் ஞானசார புகுந்து அடாவடித்தனத்தில் ஈடுபட்டார். அதையடுத்து நீதித்துறையை அவமதித்ததற்காக 2018 ஆகஸ்டில் மேன்முறையிட்டு நீதிமன்றம் 6 வருட சிறைத்தண்டனை விதித்தது. அந்த தீர்ப்புக்கு எதிராக அவர் செய்த மேன்முறையீட்டை உயர்நீதிமன்றம் நிராகரித்ததை அடுத்து அவர் சிறைக்குச் செல்ல வேண்டியதாயிற்று.

ஆனால், ஒன்பது மாதங்களில் 2019 மே 21 ஆம் திகதி அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஞானசாரவுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார். ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று சரியாக ஒரு மாதத்துக்கு பிறகு அவர் சிறையில் இருந்து வெளியே வந்தார். அவரை விடுதலை செய்ததற்கான காரணம் எதையும் ஜனாதிபதி கூறவில்லை.

ஜனாதிபதி வழங்கிய மன்னிப்பு மனித உரிமைகள் குழுக்கள், சிவில் சமூக மற்றும் சட்டத்துறை அமைப்புக்களின் கடுமையாக கண்டனத்துக்கு உள்ளானது. அந்த மன்னிப்பு பெரும்பான்மை இனவாதத்தை வேறு ஒரு மட்டத்துக்கு கொண்டுசென்றுவிட்டதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் வர்ணித்திருந்தார். ஜனாதிபதி சிறிசேனவைப் பொறுத்தவரை ஞானசாரவை மன்னிப்பது சிங்கள பௌத்த சமூகத்துக்கு செய்யும் ஒரு மகத்தான சேவையாக நினைத்தாரோ தெரியவில்லை.

அடுத்ததாக, 2016 ஆண்டில் குருநாகல் மாவட்டத்தில் உள்ள பிரபல்யம் வாய்ந்த ஒரு பௌத்த விகாரையில் இடம்பெற்ற செய்தியாளர்கள் மகாநாட்டில் ஞானசார இஸ்லாம் மதத்தையும் முஸ்லிம் சமூகத்தையும் இழிவுபடுத்தப் பேசியதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கொழும்பு மேல்நீதிமன்றம் கடந்த மார்ச் 28 ஆம் திகதி அவருக்கு நான்கு வருட கடூழியச் சிறைத் தண்டனையையும் 100,000 ரூபா அபராதத்தையும் விதித்து தீர்ப்பளித்தது. சுகவீனத்தைக் காரணம் காட்டி அவரைப் பிணையில் விடுவிக்குமாறு அவரது சட்டத்தரணி விடுத்த வேண்டுகோளை நீதிபதி நிராகரித்தார்.



**சில மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு சிறிமங்களராமய விகாராதிபதி நடுவீதியில் நின்று தென்னிலங்கையில் வாழும் தமிழர்களை துண்டுதுண்டாக வெட்டுவேன் என்று அட்டகாசமாகக் கதறினார். ஆனால் மறுநாள் தனது செயலுக்காக பகிரங்க மன்னிப்புக்கோரி காணொளி ஒன்றை வெளியிட்டார். அவரது அட்டகாசம் வெறுமனே ஒரு மன்னிப்புடன் மறந்துவிடக்கூடியதல்ல. அவரைப் போன்று வேறு ஒரு மதத்தைச் சேர்ந்த மதகுரு நடந்திருந்தால் பொலிசார் என்ன செய்திருப்பார்கள்? சட்டம் அவரை என்ன செய்திருக்கும்?**

முதன்முதலாக சிறைசென்றபோது ஞானசாரவுக்கு ஒன்பது மாதங்களுக்கு பின்னரே ஜனாதிபதி சிறிசேன மனனிப்பு அளித்து விடுதலை செய்தார். ஆனால் இப்போது இரண்டாவது தடவையாக அவர் சிறைக்கு சென்றபோது இரு மாதங்கள் கடந்துவிடுவதற்கு முன்னதாகவே அவரை விடுதலை செய்யவேண்டும் என்று மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கிறார்கள். அந்த வேண்டுகோள் மூலமாக சமூகத்துக்கு கூறுகின்ற செய்தி என்ன?

சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டி விடுகின்ற வீராவேசமானதும் நச்சுத்தனமானதுமான பிரசாரங்களைச் செய்கிறவர்களும் ஏனைய மதங்களை அவமதிக்கின்றவர்களும் காவி உடையை அணிகின்றவர்கள் என்பதற்காக நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தண்டனையை அனுபவிக்க அனுமதிப்பது உகந்ததல்ல என்பதா அந்தச் செய்தி.

இலங்கையில் ஞானசாரவை போன்று சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான படுமோசமான கருத்துக்களைக் கொண்ட பௌத்த பிக்குமார் காலங்காலமாக இருந்து வந்திருக்கிறார்கள். பலமான அரசியல் பின்னணி இல்லாமல் அவர்களால் அந்தளவுக்கு அடாவடித்தனமாக நடந்திருக்க முடியாது. அவர்களின் நடத்தைகள் பொதுவில் மகாசங்கத்துக்கு அவமதிப்பையே கொண்டுவந்திருக்கிறது என்பதை மகாநாயக்கர்கள் அறியாதவர்கள் அல்ல.

ஆனால் பிக்குமாரில் கணிசமான பிரிவினர் பௌத்த கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரணாக நடந்துகொள்வதையும் அரசியலில் ஈடுபடுவதையும் மகாநாயக்கர்களினால் தடுக்கமுடியவில்லை. இலங்கையில் இடம்பெற்ற அனைத்து இனவன்முறைகளின்போதும் பிக்குமார் முன்னணியில் இருந்திருக்கிறார்கள்.

சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான வெறுப்பு அரசியல் என்பது இலங்கைக்கு ஒன்றும் புதியது அல்ல. அந்த போக்கு நவீன இலங்கையின் பெரும்பான்மை இனவாத அரசியலின் வளர்ச்சியுடன் சமாந்தரமாக வளர்ந்து வந்திருக்கிறது. அதை தடுக்கவேண்டுமானால் சிங்கள அரசியல் சமுதாயம் சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் அங்கீகரித்து தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு முன்வந்திருக்க வேண்டும்.

ஆனால், நாட்டுக்கு பெரும் அழிவைக் கொண்டுவந்த மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரும் கூட சிங்கள அரசியல் சமுதாயம் அத்தகைய தீர்வொன்றைக் காணவேண்டியதன் அவசியத்தைப் புரிந்து கொள்ளவில்லை. அந்த அவசியத்தை சிங்கள மக்களுக்கு உணர்த்தக்கூடிய ஆரோக்கியமான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய முற்போக்கு சக்திகளும் தென்னிலங்கையில் இல்லை.

கடந்த வாரம் வடக்கில் இடம்பெற்ற நினைவுகூரல் நிகழ்வுகளும் அவை தொடர்பில் தெற்கின் பிரதிபலிப்புகளும் இனப்பிளவு மேலும் ஆழமாக இருப்பதையே வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பிறகு தெற்கின் இனவாத சக்திகள் தங்களது அரசியலைத் தொடருவதற்கு புதிய ஒரு இனத்துவ எதிரி தேவைப்பட்டது. முஸ்லிம் சமூகத்தின் வடிவில் அந்த எதிரியைக் கண்டுபிடித்த இனவாதச் சக்திகள் வெறித்தனமான பிரசார இயக்கங்களை முன்னெடுப்பதற்காக ஞானசாரவை முன்னங்கத்துக்கு கொண்டுவந்தார்கள்.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் பொதுபல சேனாவின் அங்குரார்ப்பண மகாநாட்டுடன் முடுக்கிவிடப்பட்ட மதவெறி ஏற்படுத்திய அனர்த்தங்களை இங்கு மீண்டும் நினைவுபடுத்த வேண்டியதில்லை. முஸ்லிம் சமூகத்திடம் இருந்து பௌத்த மதத்துக்கு அச்சுறுத்தல் வந்திருக்கிறது என்று ஒரு தவறான எண்ணத்தை தோற்றுவித்து சிங்கள பௌத்த சமூகத்தை ஒரு முற்றுகை மனநிலைக்கு உள்ளாக்கி முன்னெடுக்கப்பட்ட அரசியல் அதன் படுமோசமான தோல்வியை இரு வருடங்களுக்கு முன்னர் "அறகலய" என்ற மக்கள் கிளர்ச்சியின் வடிவில் சந்தித்தது.

சிங்கள பௌத்தர்களின் நலன்களுக்கும் சிங்களவர்களும் பௌத்தர்களும் அல்லாத ஏனைய சகல பிரிவினரதும் நலன்களுக்கும் இடையிலான போட்டியே தன்னை அதிகாரத்துக்கு கொண்டுவந்தது என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அண்மைய தனது நூலில் தெரிவித்த கருத்து மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கு

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2005 தேர்தல் பகிஷ்கரிப்பால் ரணில் தோல்வியடைந்தமைக்கு சுமந்திரன் வருந்துகிறாரா?

**பனங்காட்டான்**

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் திட்டமிட்டவாறு இவ்வருட பிற்பகுதியில் நடைபெறுமென்று நம்புவதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

அண்மைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி தேர்தலே இவ்வருடத்தில் முதலில் இடம்பெறுமென்று அறிவித்த ஜனாதிபதி ரணில், அதுவா இதுவா முதலில் நடைபெறுமென்று இழுபறிப்படும் கேள்விக்கு விடை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற பின்னர் - சிலவேளை அடுத்த சில மாதங்களுக்குள் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமென்று ரணிலின் குடும்பப் பத்திரிகையான டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

ரணில் தேர்தலில் வென்றால் இது நடைபெறும். இவர் தேர்தலில் தோற்றாலும் புதிய ஜனாதிபதி நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி தமது பலத்தை நிரூபிக்க விரும்புவார். எனவே ரணில் வென்றாலென்ன தோற்றாலென்ன ஜனாதிபதி தேர்தலின் பின்னரான சில மாதங்களில் நாடாளுமன்றத் தேர்தல் நிச்சயம் இடம்பெறும்.

தமது ஜனாதிபதி தேர்தல் பரப்புரைக்கு ரணில் வடக்கில் பிள்ளையார் சுழி போட்டிருப்பதையும் இங்கு கட்டாயம் குறிப்பிட வேண்டும். தென்னிலங்கையின் சகல அரசியல் கட்சிகளுக்குள்ளும் புகுந்து விளையாடி பிளவுகளை ஏற்படுத்தி வரும் இவர், அதுபோதாதென்று தமிழர் தரப்பிலும் இதனை ஆரம்பித்துள்ளார்போலத் தெரிகிறது.

வடக்குக்கு மூன்று நாள் தேர்தல் சுற்றுலா ஆரம்பித்த ரணில் முதல்நாள் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடக் கட்டிடம் ஒன்றைத் திறந்து வைத்தார். உறுமய திட்டத்தின் கீழ் இலவச காணிப்பத்திரங்களை பலருக்கு வழங்கி அவர்களை மகிழ்வித்தார். யாழ்ப்பாண குடாநாட்டின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூவர் இவரது நிகழ்வில் பங்குபற்றினர். ஈ.பி.டி.பி.யைச் சேர்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புளொட் அமைப்பின் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழரசுக் கட்சியின் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் இவர்கள். சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அங்கஜன் இராமநாதனைக் காணவில்லை.

மருத்துவபீட நிகழ்வில் ரணில் நீண்டதொரு உரையை நிகழ்த்தினார். முன்னர் ஒரு தடவை இப்பத்தியில் குறிப்பிட்டது போன்று இந்த உரையை ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனம் என்று கூறலாம். வடக்கு கிழக்கு பிரச்சனைகளுக்கு விரைவில் உறுதியான தீர்வு என்ற பாணியில் இவரது உரை அமைந்திருந்தது.

யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகை இவரது உரைக்கு, 'தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கான நேரம் இதுவே" - ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு என்று தலைப்பிட்டிருந்தது. அதாவது, தம்மை மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்தால் தம்மால் தமிழர் பிச்சனைகளைத் தீர்க்க முடியுமென ரணில் கூறியிருப்பதாக இது அர்த்தப்படுகிறது.

இந்த உரையில், தமிழர்களின் காணிப் பிரச்சனைகள், தடுப்புக்காவல் கைதிகள் விடுதலைப் பிரச்சனை, இழப்பீடுகள் வழங்கல், உண்மை மற்றும் நம்பிக்கை முயற்சி, காணாமற் போனோர் விவகாரம், முன்னைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் என்று எல்லாவற்றையும் சுட்டிக்காட்டிய இவர், தாம் மேற்கொண்ட திட்டங்கள் நிறைவேறினால் வடக்கு புரட்சிகரமாக மாறுமென்று தெரிவித்துள்ளார். இந்திய உதவியுடன் திருமலையை அபிவிருத்தி செய்வதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

தமிழர்களின் பிரச்சனைகள் இதுவரை தீர்க்கப்படவில்லையென்று அவர் கூறும்போது தமது நல்லாட்சிக் காலத்திலும் அது நடைபெறவில்லையென்பதை அவர் தெரிந்து வைத்திருப்பாரென நம்ப இடமுண்டு. தேர்தல் காலத்தில் நம்ப முடியாத வாக்குறுதிகளை வேட்பாளர்கள் அள்ளி வீசுவதும் பின்னர் மறந்துவிடுவதும் அரசியலில் சர்வசாதாரணம்.



ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக எதிர்பார்க்கப்படும் சஜித் பிரேமதாச, அனுர குமார திசநாயக்க ஆகியோரைவிட பல காரணங்களால் ரணில் முக்கியமானவர். 1977ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அரசியலில் இருப்பவர். ஆறு தடவைகள் பிரதமர் பதவியை வகித்தவர். சுமார் இருபதுக்கும் அதிகமான அமைச்சர் பதவிகளில் இருந்தவர். விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து பேச்சுவார்த்தை நடத்தியவர். இறுதியாக ஜனாதிபதிப் பதவியையும் வகித்து வருபவர். இத்தனை வருடங்களில் தமிழரின் ஏதாவதொரு பிரச்சனையை இவர் தீர்த்திருப்பாரென்று சொல்வதற்கு ஒன்றுமில்லை.

நல்லாட்சிக் காலம் என்பது இவரது அரசியல் வாழ்வில் முக்கியமான காலகட்டம். மைத்திரி ஜனாதிபதியாகவும், இவர் பிரதமராகவும் இருந்தனர் என்பதைவிட, தமிழ் தேசிய கூட்டமைப்பு சம்பந்தன் தலைமையில் எதிர்க்கட்சியாக இருந்தபோதிலும் நல்லாட்சியின் பங்காளியாக அனைத்து விடயங்களிலும் ரணிலுடன் சேர்ந்து இயங்கியது என்பது பகிரங்கமானது.

இனப்பிரச்சனைக்கென புதிய அரசியலமைப்பு உ[illegible] சுமார் நூறு வ[illegible] நடத்தப்பட்டன. இதற்கான சில வரைபுகளும் தயாரிக்கப்பட்டன. புதிய அரசியலமைப்பு இதோ வருகிறது என்று கூட்டமைப்பின் எம்.பி. சுமந்திரன் பல நூறு தடவை தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டி வந்தார்.

"இவர்தான் எங்கள் சட்டமா அதிபர்" என்று சுமந்திரனை விரல் சுட்டி பொது நிகழ்வுகளில் ரணில் அடையாளம் காட்டியதை மறக்கமுடியாது. சுமந்திரன் ஒரு தடவை கனடாவுக்குச் சென்றபோது அங்குள்ள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் புதிய அரசியலமைப்புப் பற்றி தெரிவித்த கருத்து நிரந்தரப் பதிவுக்குரியது.

தம்மை தொழில்ரீதியாக ஒரு வழக்கறிஞர் என்று தெரிவித்த இவர், தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு தரக்கூடிய புதிய அரசியலமைப்பை நிறைவேற்றியதும் தாம் அரசியலிலிருந்து விலகிச் சென்றுவிடுவேனென்று கூறினார். அப்போது செவ்வி கண்டவர் நுணுக்கமாக ஒரு கேள்வி கேட்டார். "புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படாவிட்டால் என்ன செய்வீர்கள்" என அக்கேள்வி அமைந்தது.

எனது பணி முடிந்துவிட்டது எனக் கூறி அரசியலிலிருந்து விலகி வழக்கறிஞர் தொழிலுக்கு சென்றுவிடுவேனென்று சுமந்திரன் நிதானமாக பதில் சொன்னார். ஆக, இரண்டில் எதுவானாலும் அரசியலிலிருந்து விலகி விடுவேன் என்பதாகவே சுமந்திரனின் பதில் இருந்தது.

நல்லாட்சிக் காலத்தில் ரணிலுடன் கூட்டமைப்பு தேநிலவு கொண்டாடிய வேளையில் இந்தச் செவ்வி இடம்பெற்றது. நல்லாட்சி நாலரை ஆண்டுகளில் முடிந்தது. தேநிலவும் கசந்தது. ரணில் எதனையும் வழங்கவில்லை. புதிய அரசியலமைப்பு என்பது கானல் நீரானது. ஆனால் சுமந்திரன் இன்னமும் எம்.பி. யாகவே இருக்கிறார்.

கோட்டபாய ஆட்சிக்காலத்தில் சுமந்திரன் மீண்டும் கனடா சென்று அவரது ஆதரவாளர் நடத்திய கூட்டத்தில் பங்கேற்றதும், பார்வையாளரின் கேள்விக[illegible] முடியாததால் கூட்டம் [illegible]ந்ததும், கனடிய பொலிஸாரின் பாதுகாப்புடன் மண்டபத்திலிருந்து அவர் வெளியேற்றப்பட்டதும்....... இது இன்னொரு கதை.

இந்தத் தொடரின் மற்றொரு அத்தியாயம் கடந்த வார ரணிலின் யாழ்ப்பாண நிகழ்வில் இடம்பெற்றது. அண்மைய காலங்களில் ரணிலுக்கு எதிராகவும், சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் தொனியிலும் தமது கருத்துகளை வெளியிட்டு வந்த சுமந்திரன் ரணிலின் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தார். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி என்ற வகையில், ஜனாதிபதி பங்குபற்றும் நிகழ்வில் கட்சி பேதத்துக்கு அப்பாற்பட்டதாக இவர் பங்கேற்றதில் எந்தத் தவறும் கிடையாது. ஆனால் இங்கு உரையாற்றுகையில் இவர் முன்னெடுத்த விடயம்தான் பலரையும் சினக்க வைத்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் நீண்டகாலமாக அபிவிருத்தியின் பலனை அனுபவிக்கவில்லையென்று ரணில் தமது உரையில் குறிப்பிட்டதை, தமது உரைக்கான கருவாக எடுத்துக் கொண்ட சுமந்திரன், 2005ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணித்ததை தவறான முடிவு எனும் வகையில் குறிப்பிட்டு அதற்காக அவர்கள் இப்போதாவது வருத்தத்துடன் நினைவு கூருவார்கள் என்று கூறி ரணிலின் கடைக்கண் பார்வையை தம்பக்கம் இழுக்க எடுத்த முயற்சி ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

2005ம் ஆண்டுத் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணித்ததால்தான் ரணில் தோல்வியடைந்தார் என்பது நிதர்சனம். இது அன்றைய சூழலில் தேவையான ஒன்றாக இருந்தது. ஆனால் இதனை ரணிலை தமிழ் மக்கள் தோற்கடித்தனர் என்ற அர்த்தத்தில் கூறி ரணிலிடம் சபாஷ் பெற வேண்டிய தேவையில்லை.

அந்தத் தேர்தலில் தாம் வெற்றி பெறாத ஆதங்கம் ரணிலுக்கு இருக்கலாம். ஆனால் அவர் நாலரையாண்டு நல்லாட்சிக் காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் சேர்ந்து அவர்களையும் ஏமாற்றி தமிழ் மக்களை எவ்வாறு எத்திப் பிழைக்கும் அரசியல் செய்தாரென்பது எல்லோருக்கும் தெரியும். வேண்டுமானால் சுமந்திரன் இதை தமது உரையில் சுட்டியிருக்கலாம்.


தொடர்ச்சியாக வந்த சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்ட காரணத்தாலேயே தமிழர்கள் 2005 தேர்தலை புறக்கணித்ததையும், வரப்போகின்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்த விரும்புவதையும் ரணில் நன்கறிவார். இதனை அறியாதவர் போல் சுமந்திரன் தமிழ் மக்கள் தவறு செய்ததுபோல பொதுவெளியில் ரணில் முன்னிலையில் பகிஷ்கரிப்பை சுட்டியிருக்க வேண்டியதில்லை.

பொதுவேட்பாளரை எதிர்க்கும் கருத்துடைய சுமந்திரனும் சம்பந்தனும் வரப்போகும் ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிக்கப் போகிறார்கள் என்பது தெரியவர தொடங்கியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ரஃபா மீது நடத்தும் தாக்குதலை நிறுத்தவும்" சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு வழங்கிய தீர்ப்பு

பாலஸ்தீனத்தின் ரஃபா நகரில் தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு ஐ.நா-வின் சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு உத்தரவிட்டுள்ளது. அதனுடன் இஸ்ரேலுக்கு பல்வேறு உத்தரவுகளையும் அந்நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவை ஹமாஸ் வரவேற்றுள்ள நிலையில், இஸ்ரேல் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.



முன்னதாக, தெற்கு காஸாவில் உள்ள ரஃபாவில் தாக்குதலை நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு உத்தரவிடுமாறு ஐ.நா-வின் சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாப்பிரிக்கா கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த வழக்கின் விசாரணையை வெள்ளிக்கிழமை (மே 24) அன்று சர்வதேச நீதிமன்றத்தின் தற்போதைய தலைவர் நீதிபதி நவாஃப் சலாம் தலைமையேற்று நடத் தினார்.



அப்போது, "காஸா முனையில் மக்களின் பேரழிவுக ரமான வாழ்க்கை நிலை மேலும் மோசமடைந்துள்ளது," எனக் குறிப்பிட்ட அவர், குறிப்பாக நீடித்த மற்றும் பரவ லான உணவுப் பற்றாக்குறையை நீதிமன்றம் வருத்தத்துடன் கவனித்ததாகத் தெரிவித்தார்.

மேலும், ரஃபாவில் நடக்கும் ராணுவத் தாக்குதல் நடவடிக்கையை அடிக்கோடிட்டுக் காட்டிய பல்வேறு ஐ.நா. அதிகாரிகளை நீதிபதி மேற்கோளிட்டு காட்டினார்.

ரஃபாவில் மே 7 அன்று இஸ்ரேல் ராணுவத் தாக்கு தலை தொடங்கிய நிலையில், மே 18 வரை சுமார் 8 லட் சம் பாலத்தீன மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

### நீதிமன்றம் கூறியது என்ன?

விசாரணையை தொடர்ந்து, பாலத்தீன மக்களுக்கு 'உடனடி ஆபத்து' எனக்கூறி, ரஃபாவில் இஸ்ரேல் ராணுவ தாக்குதல் மற்றும் மற்ற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டது.

அங்கு நிலவும் தற்போதைய சூழல், "காஸாவில் உள்ள மக்களின் உரிமைகளுக்கு ஈடுசெய்ய முடியாத தீங்கு விளைவிக்கும்" என நீதிபதி சலாம் தெரிவித்தார்.

மேலும், இன்றைய உத்தரவின் அடிப்படையில் அங்கு ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து இஸ்ரேல் இன்னும் ஒரு மாதத்தில் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதவிர, மனிதாபிமான உதவிகள் நுழைவதற்காக எகிப்து-காஸா இடையிலான ரஃபா எல்லையைத் திறக்க வேண்டும் என்றும், விசாரணை அமைப்புகள் மற்றும் உண்மை கண்டறியும் குழுக்கள் காஸாவுக்குச் செல்வதற்கான அணுகலை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஹமாஸால் பிடிக்கப்பட்டுள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகள் இன்னும் விடுவிக்கப்படாதது குறித்தும் நீதிபதி சலாம் கவலை தெரிவித்தார்.

"பணயக்கைதிகளின் நிலை குறித்து நீதிமன்றம் மிகுந்த கவலையை வெளிப்படுத்துகிறது. மேலும் அவர்களை உடனடியாக, நிபந்தனையின்றி விடுவிக்க அழைப்பு விடுக்கிறது," என்று அவர் தெரிவித்தார்.



"இன்னும் பலர் சிறைபிடிக்கப்பட்டிருப்பது மிகவும் கவலையளிக்கிறது," என்றும் அவர் கூறினார்.

### ஹமாஸ், இஸ்ரேல் கூறியது என்ன?

சர்வதேச நீதிமன்றத்தின் இந்த உத்தரவு "(தாக்குதல்) நிறுத்தத்திற்கான தெளிவான அழைப்பு" என தென்னாப்பிரிக்காவின் வெளியுறவுத் துறை அமைச்சர் நலேடி பண்டோர் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், 'சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை நாங்கள் வரவேற்கிறோம். ரஃபா நகரில் எங்கள் மக்களுக்கு எதிரான தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று இந்த தீர்ப்பு கோருகிறது," என தெரிவித்தார்.

இதற்கிடையில் இஸ்ரேலின் எதிர்க்கட்சித் தலைவர் யாயிர் லாபிட் கூறுகையில், "ரஃபாவில் ராணுவ நடவடிக்கையின் முடிவை, பணயக்கைதிகளை விடுவிப்பதற்கும், பயங்கரவாதத்திற்கு எதிராக தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் இஸ்ரேலின் உரிமைக்கும் சர்வதேச நீதிமன்றம் நேரடியாக இணைக்கவில்லை என்பது ஒரு மோசமான தார்மீகத் தோல்வியாகும்," என அதிருப்தி தெரிவித்தார்.


சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிவந்த சில நிமிடங்களிலேயே, ரஃபா நகரின் மையத்தில் உள்ள ஷபூரா முகாம் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் தொடர் வான்வழித் தாக்குதல்களை நடத்தின.

### வழக்கு விவரம்

இந்த வழக்கு விசாரணையின் போது, தென்னாப்பிரிக்கா தரப்பு வழக்கறிஞர்கள், பாலத்தீன மக்களின் வாழ்க் கையை உறுதி செய்வதற்கு தேவையான தற்காலிக நடவ டிக்கைகளை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண் டும் என சர்வதேச நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டனர்.

மேலும், காஸாவுக்குள் நிவாரண பணியாளர்கள், ஊட கவியலாளர்கள், விசாரணையாளர்களுக்கு "தடையற்ற அனுமதியை" வழங்க இஸ்ரேலை வலியுறுத்தினர்.

தென்னாப்பிரிக்காவின் இந்த வழக்கை "முற்றிலும் ஆதாரமற்றது"



என்று கூறியுள்ள இஸ்ரேல், அக்டோபர் 7-ஆம் தேதி நடந்த தாக்குதலுக் குப் பிறகு மீதமுள்ள ஹமாஸ் படையினரை அழிக்க ரஃபாவில் தங்கள் நாடு மேற்கொண்டுள்ள தாக்குதல் முக்கி யமானது என தெரிவித்துள்ளது.

சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவுகள் சட்டபூர்வமானது என்றாலும், நடைமுறையில் உத்தரவுகளை அந்நீதிமன்றத்தால் செயல்படுத்த முடியாது.

காஸாவில் பாலத்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் இனப்படுகொலையை நிகழ்த்துவதாகவும் தென்னாப்பிரிக்கா குற்றச்சாட்டு தெரிவித்திருந்தது. இந்த வழக்கில் கடந்த ஜனவரி 26 அன்று வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவில், காஸாவில் நடந்துவிடக்கூடிய இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இஸ்ரேலுக்கு உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு உலகம் முழுவதிலும் பல்வேறு தரப்பினரால் உற்றுநோக்கப்படுகிறது. ●

# போர்க் குற்றங்களில் ஈடுபடும் அந்நிய கூலிப்படைகள்

மருத்துவர் சி.யமுனாநந்தா

உலகில் மனித உரிமைகளை மதிக்காது ஆட்சியாளர்களின் நலனுக்காக உருவாக்கப்படும் இராணுவங்கள் அந்நாடுகளுக்கு அப்பால் கூலிப் படைகளாகச் செயல்படும் தன்மை அவதானிக்கப்பட்டுள்ளது. கடந்த 30 வருடங்களாக ஆபிரிக்கக் கண்டத்தின் இராணுவ அணிகள் அவ்வாறு செயற்பட்டமை சர்வதேச மனித உரிமை மையத்திற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பிரதிநிதிகளுக்கும் தெரியும். இவ்வாறு கூலிப்படைகளால் மேற்கொள்ளப்படும் போர்க் குற்றங்கள் முறையான சர்வதேச விசாரணைக்கு உள்ளடக்கப்படுவதில்லை.

தற்போதய உலக போர் கள முனைகளான ரஸ்சியா உக்ரெயின் போரிலும் காஸா இஸ்ரேல் போரிலும் பலநாட்டு இராணுவ வீரர்கள் கூலிப்படைகளாகச் செயற்பட்டு போர்க் குற்றங்களில் ஈடுபட்டு வருகின்றன. இவ்வாறே உலகில் புதிது புதிதாக உருவாகும் யுத்த முனைகளிலும் பலநாடுகளில் இருந்து இராணுவ வீரர்கள் கூலிப்படைகளாக களமிறங்கி போர்க் குற்றங்களில் ஈடுபடும் சூழல் உருவாகியுள்ளது.

அண்மைக்காலச் செய்திகளில் இலங்கையைச் சேர்ந்த படைவீரர்கள் மாலியில் போர்க்குற்றம் இழைத்தமை பற்றியும் இலங்கை படையில் பணிபுரிந்தோர் வேலைவாய்ப்பு என்ற போர்வையில் இஸ்ரேல், உக்ரெயின், ரஸ்யா போன்ற நாடுகளின் களமுனைகளில் பணிபுரிய அனுப்பப்படும் தன்மையும் அறியக்கூடியதாகவுள்ளது. இவை எதிர்காலத்தில் இலங்கை இராணுவத்தில் பணிபுரிந்தோரிடையே சர்வதேச ரீதியில் முறுகல் நிலையினை ஏற்படுத்தும். இலங்கையில் யுத்தத்தின் எதிர்த்தரப்பான தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கமாக தடைசெய்த மேற்குலகும் இந்தியாவும் தமிழ் மக்களைத் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருகின்றன. மேலும் அண்மையில் இந்தியாவில் மேலும் 5 வருடங்களிற்கு தடைவிதித்தமை தமிழ் மக்கள் உலகில் ஒருபோதும் போர்க் குற்றங்கள்ல் ஈடுபட மாட்டார்கள் என்பதனை உறுதிப்படுத்துகின்றது. ஆனால் இலங்கைப் படையினர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் புரிந்த, புரிகின்ற போர்க்கள நடவடிக்கைகள், போர்க் குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டமைப்பு உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் தேவை.

குறிப்பாக சிங்கள மக்கள் உணர வேண்டிய உண்மையாதெனில் தற்போதைய பொருளதார நெருக்கடியில் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு என்ற போர்வையில் கூலிப்படைகளாக இணைதல் உலக மனித நேயத்திற்கு இழைக்கப்படும் பங்கம் ஆகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாக எதிர்வினையாற்றுவோரின் நிலைப்பாடுகள்!


கந்தையா அருந்தவபாலன்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவதற்கான ஆதரவைப் பெறுவதற்காகக் குடிசார் அமைப்புகளின் உறுப்பினர்கள் கடும் முயற்சிகளில் ஒருபுறம் ஈடுபட்டுவருகையில் அதற்கெதிரான நிலைப்பாடு கொண்டோர் அவர்களின் அந்த முயற்சிகள் எவ்வகையிலும் வெற்றிபெற்றுவிடக்கூடாது என்பதில் உறுதியாகச் செயற்பட்டுவருவது தமிழர் அரசியலில் இன்றைய முதன்மைக் காட்சிகளாக உள்ளன. இக்காட்சிகளில் எதிர்நிலைப்பாட்டில் இருக்கும் நாயகர்களாக அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் மட்டுமன்றி தமிழ்த் தேசியக் கட்சியாக தன்னைக் காட்டிக் கொள்ளும் தமிழரசுக் கட்சியின் ஒரு பிரிவினரும் அவர்கள் சார்பான சில ஊடகங்களும் தோன்றுவதைக் காணமுடியும். இவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் தமது மக்களுக்கு தமிழ்ப் பொது வேட்பாளரைவிட சிறந்த தெரிவு எது என்பது பற்றியும் அத்தெரிவு எவ்வழிகளில் மேலானது என்பது பற்றியும் மக்களுக்கு எடுத்துக்கூறி தமக்கானஆதரவைத் திரட்டுவதற்குப் பதிலாக குடிசார் அமைப்புகள் மற்றும் தலைவர்கள் மீதான ஆதாரமற்ற பொய்கள், புனைகதைகள், சதிக்கோட்பாடுகள் மூலம் அவர்களின் பாதையில் முட்களை விதைக்க முயற்சிக்கிறார்களே அன்றி தாம் கருதும் சரியான பாதையை மக்களுக்குக் காட்ட மறுக்கிறார்கள்.

இவர்களின் தெரிவு தென்னிலங்கை வேட்பாளர்களில் ஒருவருக்கு மக்களை வாக்களிக்கச் செய்வதாயின் அவர் யாராக இருந்தாலும் அவரிடமிருந்து எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு, அதை அவர் நிறைவேற்றுவார் என்பதற்கான உத்தரவாத ஏற்பாடுகள் எவை என்பது தொடர்பாகக் கூட இவர்கள் கதைக்கத் தயாரில்லை. வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்காகக் காத்திருக்கச் சொல்லும் இவர்கள் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நியாயமான வகையில் தீர்ப்பது தொடர்பாக இவ்வேட்பாளர்கள் எவருமே எதுவும் கூறாது விட்டால் இத்தேர்தலில் தமிழ் மக்களுக்கான அடுத்த தெரிவு என்ன என்பதையும் இவர்கள் கூறத் தயாரில்லை. இதிலிருந்து இவர்கள் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற பரப்புரையின் மூலம் மக்கள் அரசியல் விழிப்புப் பெறுவதையும் அவர்கள் ஒன்று திரள்வதையும் தடுத்து இறுதிநேரத்தில் குறித்த ஒரு வேட்பாளருக்கு தமிழ் மக்களின் வாக்குகளைத் தாரைவார்த்து தமது தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற விரும்புகிறார்களோ என்று மக்கள் ஐயுற வேண்டியுள்ளது.

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான முயற்சிக்குக் கடைசியாகப் போடப்பட்ட பெரிய முட்டுக்கட்டை இரா.சம்பந்தன் பெயரில் வெளியான செய்தியும் தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தின் முடிவும். யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் மின்னியல் நாளிதழ் ஒன்று தனது மே 16 மாலைப்பதிப்பில் சம்பந்தன் தமிழரசுத் தலைவர்களுக்கு தெரிவித்ததாக ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது. அதில் "உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு கிழக்குக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு என்பதுதான் சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசும் சேர்ந்து இணங்கிக் கொண்ட கடைசி விடயம். இதற்குப் பாதிப்பு-குந்தகம் ஏற்படுத்தும் விதத்திலான முடிவு எதையும் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விஷப்பரீட்சை ஊடாக செய்வதற்கு தமிழரசுக் கட்சியினர் இணங்கிவிட- இறங்கிவிடக்கூடாது." இச்செய்தியின் உள்ளடக்கம் தொடர்பாக நோக்குவதற்கு முன் இச்செய்தியின் உண்மைத் தன்மை தொடர்பாகப் பல்வேறு தரப்புகளாலும் வெளியிடப்பட்ட ஐயங்கள் பற்றியும் அறியவேண்டும்.

இந்தச் செய்தியில் சம்பந்தன் கூறியதாக உள்ள விடயங்கள் சுமந்திரன் மூலம் வெளிப்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் இதுபற்றி வேறு ஊடகங்களில் செய்திகள் வந்ததாகத் தெரியவில்லை என்பதுடன் குறித்த நாளிதழிலும் சுமந்திரன் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட வில்லை. சம்பந்தன் அறிக்கையாகவும் வெளியிடவில்லை. அதேவேளை நாளிதளின் செய்தி ஆசிரியரின் தகவலாகவோ அன்றி சாராம்சமாகவோ இல்லாமல் சம்பந்தனின் கூற்றுக்களாகவே செய்தி காணப்படுகிறது. சம்பந்தன் மூப்பின் காரணமாக இயல்பாக இயங்க முடியாமல் இருப்பதாகவும் அவர் கதைப்பதை



சம்பந்தன் மூப்பின் காரணமாக இயல்பாக இயங்க முடியாமல் இருப்பதாகவும் அவர் கதைப்பதை விளங்கிக் கொள்ள முடியாமல் இருப்பதாகவும் சொல்லப்படும் இந்நேரத்தில் இவ்வாறான வாக்கியங்களை அவர் கூறியிருக்க முடியுமா என்பது இயல்பாக எழக்கூடிய ஓர் ஐயம்.

விளங்கிக் கொள்ள முடியாமல் இருப்பதாகவும் சொல்லப்படும் இந்நேரத்தில் இவ்வாறான வாக்கியங்களை அவர் கூறியிருக்க முடியுமா என்பது இயல்பாக எழக்கூடிய ஓர் ஐயம். அத்துடன் அச்செய்தியில் தான் மாவையுடனும் சிறீதரனுடனும் இதுபற்றிக் கதைத்தாக கூறும் சம்பந்தன் அவர்களிடம் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்குமாறு கேட்காமல் அல்லது நேரடியாக அறிவிக்காமல் சுமந்திரனிடம் ஏன் தெரிவித்தார்? அதுவும் அண்மைக்காலத்தில் சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்குமிடையில் முன்னரைப்போல் உறவு இல்லை எனச் செய்திகள் தெரிவிக்கும் நிலையில் அதன் உண்மைத்தன்மை பற்றி எழக்கூடிய இன்னொரு ஐயம். அதேவேளை தங்களுடன் கதைக்கும்போது இந்த விடயம் தொடர்பாக சம்பந்தன் கதைத்ததை மாவை சேனாதிராஜாவோ அன்றி சிறிதரனோ உறுதிப்படுத்தவுமில்லை. நிராகரிக்கவுமில்லை. அதேவேளை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் சிறிதரன், அரியநேந்திரன் போன்றோர் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான தமது ஆதரவு நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினர். அதேவேளை இக்கூட்டத்தில் சம்பந்தன் கூறியதான செய்தியெவற்றையும் தலைவர் மாவை சமர்ப்பித்ததாகவும் செய்திகளில்லை என்பதுடன் பொது வேட்பாளர் முன்மொழிவை நிராகரித்து அவரால் கருத்து வெளியிடப்படவுமில்லை. அவ்வாறானால் குறித்த செய்தி கூறுவதுபோல இத்தலைவர்களுடன் சம்பந்தன் இது தொடர்பாகக் கதைக்கவில்லையா அல்லது அவரது கருத்தைக் கேட்கும் நிலையில் இவர்கள் இல்லையா என்ற கேள்வி எழுகின்றது. இவ்விடயங்கள் யாவற்றையும் கருத்திலெடுக்கும்போது அச்செய்தியின் உண்மைத்தன்மை தொடர்பாக ஐயம் எழுவதைத் தவிர்க்க முடியாது. அத்துடன் குறித்த நாளிதழ் வழமையாகச் சுமந்திரன் தொடர்பாக வெளியிட்டு வரும் செய்திகளின் பண்பு, தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாக அந்நாளிதழின் எதிர்வினையாற்றல்கள் மற்றும் தான் கூறியதாகச் சுமந்திரன் சொன்னது முழுப் பொய் என சுரேஸ் பிரேமசந்திரனின் வெளிப்பாடு என்பன சம்பந்தன் கூறியதான கூற்றுத் தொடர்பாக மேலும் ஐயங்களைத் தோற்றுவித்துள்ளன.

இனி சம்பந்தன் கூறியதான செய்தியின் உள்ளடக்கத்தைப் பார்த்தால் ஒஸ்லோ பிரகடனம் அல்லது அறிக்கையில் கூறப்பட்டதே தமிழர்க்கான அரசியல் தீர்வு, அதற்குக் குறைவானது எதற்கும் நாம் இணங்கிப் போகக் கூடாது, தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது முட்டாள்தனமானதும் பைத்தியக்காரத்தனமானது ஆகையால் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் அதற்கு இணங்கிப் போகக்கூடாது என்பதே அதன் சாராம்சம்.

சம்பந்தன் கூறியதான கூற்றில் உள்ள ஒஸ்லோ அறிக்கை என்பது சம்பந்தப்பட்ட தரப்புகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவான ஒரு உடன்படிக்கை அல்ல. குறித்த விடயங்களின் அடிப்படையில் தொடர்ந்து கலந்துரையாட இணங்கிக் கொள்ளப்பட்டது என்றுகூறும் ஒரு ஊடக அறிக்கை மட்டுமே. சம்பந்தன் கூறுவது போல அது ஒரு உடன்பாடு என்று எடுத்துக்கொண்டால்கூட, அதன் பின்னர் குறிப்பாக 2010 ஆண்டுக்குப் பின்னர் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பான கலந்துரையாடல்கள், கோரிக்கைகள் எவற்றிலும் ஒஸ்லோ அறிக்கை தொடர்பாக சம்பந்தன் தரப்பினால் பேசப்படவில்லையே. அரசாங்கத்துடனும் இராஜதந்திரிகளுடனும் அரசியல் தீர்வு தொடர்பாகப் பல கலந்துரையாடல்கள், கோரிக்கைக் கடிதங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்ட போதும் இந்த ஒஸ்லோ தீர்மானம் தொடர்பாக யாரும் கதைக்கவில்லையே. நல்லாட்சிக் காலத்தில் ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி என்றும் 'ஏக்கிய ராஜ்ய' என்பது ஐக்கிய இலங்கை எனப் பொருட்கோடல் செய்தார்களேயொழிய உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றி வாயே திறக்கவில்லையே. இதுவரை காலமும் சம்பந்தன் கனவிற்கூட வராத ஒஸ்லோ தீர்மானத்தை இப்போது தூக்கிப்பிடிப்பதன் நோக்கம்தான் என்ன?

இதைவிட இன்னும் ஆச்சரியமான கூற்று என்னவெனில் ஒஸ்லோ தீர்மானத்துக்குக் குறைந்த எதற்கும் இணங்கிப் போகக் கூடாது என்று சொல்லப்படுவது. குடிசார் அமைப்புகள் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாக பல்வேறு தரப்புகளின் ஆதரவைப் பெறும் முயற்சியில் ஈடுபடுகிறார்களேயன்றி வேட்பாளர் யாரென்றோ முன்வைக்கப்படும் கோரிக்கை எதுவென்றோ எந்த முடிவுக்கும் வரவில்லை. அவை எல்லோரும் இணைந்து எடுக்க வேண்டிய தீர்மானம் என்பது அவர்களின் நிலைப்பாடு. அவ்வாறிருக்கையில் அவர்கள் ஏதோ தீர்மானம் எடுத்துவிட்டார்கள் என்ற அடிப்படையில் ஒஸ்லோ தீர்மானத்துக்குக் குறைந்த எதற்கும் இணங்கிப் போகவேண்டாம் என்று கூறுவதன் நோக்கம்தான் என்ன?

இவர்களின் நோக்கம் மிகத்தெளிவானது. தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற முன்னெடுப்பின் கீழ் மக்கள் ஒன்று திரள்வதையும் குடிசார் அமைப்புகள் பலம் பெறுவதையும் தடுக்க வேண்டுமென்பதாகும். ஏனெனில் அவ்வாறான ஒரு நிலைமை தோன்றுமானால் இவர்கள் தாம் நினைத்தவாறு அரசியல் செய்ய முடியாமல் போகும். தமிழ் வேட்பாளர் என்பது எந்தச் சிங்கள வேட்பாளருக்கும் எதிரானதன்று. அது தமிழ் மக்கள் ஒன்று திரண்டு அரசியல் பலம் பெறுவதற்கானது. எந்தவொரு வேட்பாளரும் ஜனாதிபதியாக வந்தாலும் அவர்களுடன் மக்கள் பலத்துடன் பேசுவதற்கான வாய்ப்பை வழங்கும். தமிழ் மக்கள் வாக்களிக்கும் குறித்த வேட்பாளர் தெரிவாகவில்லை எனில் நிலைமை என்ன? வாக்களிக்கப்பட்டவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இது தொடர்பாகக் கடந்த காலமோ நிகழ்காலமோ தமிழ் மக்களுக்கு நம்பிக்கை தரவில்லையே. தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிரான நிலைப்பாடு கொண்டோர் (இவர்களுள் அதற்கு ஆதரவாக நடிக்கும் கட்சித் தலைவர்கள் சிலரும் அடக்கம்) ஜனநாயக வழியில் போராடத் தயாராக இல்லாத இவர்கள் மீண்டும் ஒருமுறை மக்களை ஏமாற்றி தங்கள் தனிப்பட்ட நலன்களை அடைய விரும்புகிறார்கள் என்பதே உண்மை. வரலாற்றில் சந்தர்ப்பங்கள் எப்போதும் கிடைப்பதில்லை. கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களை தமிழ்த்தலைவர்கள் தீர்க்கதரிசனத்துடன் பயன்படுத்தாமல் விட்டதன் விளைவை மக்கள் இன்று அனுபவிக்கிறார்கள். மீண்டும் ஒரு தவறை விடப்போகிறோமா என்பதைச் சிந்திக்கவேண்டிய நேரமிது. இல்லையெனில் தமிழ்ப் பொது வேட்பாளர் விஷப்பரீட்சை இல்லை, முட்டாள் தனமானதோ, பைத்தியக்காரத்தனமானதோ இல்லை என்பதை உணரும் காலம் தோன்றும். அப்போது தமிழ் மக்கள் இப்போது இருப்பதிலும் இன்னும் பலவற்றை இழந்திருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின அழிப்பு நினைவு நாள் கனடாவில் நினைவுகூரப்பட்டது

**குரு அரவிந்தன்**




சென்ற வாரம் கனடாவின் பல இடங்களிலும் இலங்கையில் 'முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்ட எமது உறவுகளை வணங்கி அவர்களுக்கு நினைவுத் தீபம் ஏற்றுவோம்' என்ற மனிதாபிமான அடிப்படையிலான வாக்கியம் முன்வைக்கப்பட்டு நினைவுத்தீபம் பல இடங்களிலும் ஏற்றப்பெற்றது. பொதுமக்கள், பெற்றோர்கள், மற்றும் இளைய தலைமுறையினர் பலர் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர். வழமைக்கு மாறாக இம்முறை இளைய தலைமுறையினர் பலர் மிகவும் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

காரணம் என்னவாக இருக்கும் என்பதை அறிந்து கொள்வதற்காக, அவர்களில் சில மாணவ, மாணவிகளுடன் உரையாடிய போது, 90 களின் பிற்பகுதியிலும் அதன்பின்னும் இங்கு பிறந்த பல இளைய தலைமுறையினர் இப்பொழுதுதான் இலங்கையில் தங்கள் குடும்பத்தினர் எதிர்கொண்ட இழப்புகளையும், இன்னல்களையும் பற்றி உணர்வு பூர்வமாகப் புரிந்து கொள்ள ஆரம்பித்திருப்பது தெரியவந்தது. இந்த நிகழ்வுகளின் போது, இவர்களில் பலர் இரத்ததானமும் செய்திருந்தனர்.

கனடா, ஒன்ராறியோ மாகாண அமைச்சர் விஜே தணிகாசலம் அவர்களால் கொண்டுவரப்பட்ட 'தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரம்' மே மதம் 1 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதிவரை கடைப்பிடிப்பதை சட்டமூலம் 104 உறுதிப்படுத்தியிருந்தது. இதற்கு அனைத்து கட்சிகளும் ஆதரவு வழங்கியிருந்தன. கல்விச் சபைகளும் தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட்டதால் மாணவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

இதன் தொடர்ச்சியாக, மே மாதம் 16 ஆம் திகதி ரொறன்ரோ கல்விச்சபை அறங்காவலர்களான நீதன் சண், யாழினி ராஜகுலசிங்கம், அனு சிறீஸ்கந்தராஜா ஆகியோர் கலந்து கொண்ட நிகழ்வு ஒன்று ஸ்காபரோவில் உள்ள அல்பேட் கம்பெல் கல்விநிலைய மண்டபத்தில் இடம் பெற்றிருந்தது. இனப்படுகொலை நமது சமூகத்தை எவ்வாறு பாதித்தது என்பதை அறியவும், அது தமிழ் இனத்தின் மீது எற்படுத்திய நீடித்த தாக்கத்தை மறுபரிசீலனை செய்வதற்காகவும் இந்த நிகழ்வு ஏற்படுத்தப் பட்டிருந்தது.

தமிழின அழிப்பு நினைவு நாளை நினைவுகூரும் முகமாகக் கனடியத் தமிழ் சமூகமும், மாணவர் சமூகமும் இணைந்து ஏற்பாடு செய்த இன்னுமொரு நிகழ்வு மொன்றியலில் உள்ள வான்ஹோரான் பூங்காவில் சென்ற 18 ஆம் திகதி மாலை 6 மணியளவில் இடம் பெற்றிருந்தது.




இலங்கையில் தமிழின அழிப்பிற்கான சர்வதேச பொறுப்புக் கூறலும், பரிகார நீதியும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை, சிறீலங்கா அரசின் அனுசரணையுடன் இடம் பெறும் புத்தமயமாக்கல், குடியேற்றம், இராணுவமயமாக்கல், சிங்களமயமாக்கல் மற்றும் தமிழர்களின் நிலத்தை அபகரிப்பு ஆகியவற்றை நிறுத்துதல், தமிழ் மக்களின் பாரம்பரிய மற்றும் பூர்வீக தாயகத்தில் இருந்து ஆயுதப் படைகளை அகற்றி ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவித்தல் போன்ற நோக்கங்களை ஜனநாயக முறைப்படி நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்கும் நோக்கத்தோடு இந்த நினைவுநாள் நினைவுகூரப்பட்டது.

ரொறன்ரோவில் மே மாதம் 11 ஆம் திகதி தமிழின அழிப்பு அறிவூட்டல் மகாநாடு, மற்றும் நினைவேந்தல் நிகழ்வு போன்றவை ரொறன்ரோ தமிழிசைக் கலாமன்றத்தில் இடம்பெற்றிருந்தது. இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான் என்பதைக் கனடாவில் ஆளும் லிபரல் கட்சியும், பிரதமரும் ஏற்றுக் கொண்டு செயற்படுகிறார்கள் என்பதை ஒட்டாவாவில் நடந்த நிகழ்வு ஒன்றின் போது ஸ்காபரோ ரூஜ்பாரக் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் நினைவூட்டினார். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பல்வேறு இனத்தவரும் இனப்படுகொலையின் போது கொல்லப்பட்டவர்களுக்காக அகவணக்கம் செலுத்தினார்கள். இது போன்ற பல நிகழ்வுகள் கனடா முழுவதும் முன்னெடுக்கப்பட்டுப் புதிய தலைமுறையினருக்கு இலங்கையில் நடந்த இனப்படுகொலை பற்றிய அறிவூட்டப்பட்டது.

ரொறன்ரோவில் இதே வாரம் நெடுந்தீவு குமுதினி படகில் சென்ற அப்பாவிப் பயணிகளைக் கடல் படையினர் 1985 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி புங்குடுதீவிற்கும் நெடுந்தீவிற்கும் இடையில் இடைமறித்துக் கொன்று குவிந்த அவலத்தை அவர்களின் உறவினர்களால் கண்ணீர் அஞ்சலியாக நினைவுகூரப்பட்டது. கொல்லப்பட்ட உறவுகளின் 39 ஆவது ஆண்டு நினைவு நாள் ஆத்ம சாந்தி பூசையும் தீப ஆராதனையும் கனடா சிறிஜயப்பன் இந்து ஆலயத்தில் கனடா நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தின் ஊடாக அமரர் பரராசசிங்கம் அவர்களின் குடும்பத்தினரால் நடத்தப்பட்டது. ஒரு ஜனநாயக நாட்டில், இதுவரை யாருமே இந்தப் பாதகச் செயலுக்காகத் தண்டிக்கப்படவில்லை என்ற உண்மை, இங்குள்ள இளைய தலைமுறையினரிடையே இப்பொழுதுதான் பல கேள்விகளை எழுப்பியிருக்கின்றது.

தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளை முன்னிட்டு கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், 'இரண்டு வருடங்களுக்கு முன்பு கனேடிய நாடாளுமன்றம் மே 18 ஆம் திகதியைத் தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக ஒருமனதாக அங்கீகரித்தது. போரின்போது மேற்கொள்ளப்பட்ட குற்றங்களுக்கும், இலங்கையில் அனைவரும் எதிர்கொண்ட துன்பங்களுக்கும், நீதி கிடைப்பதற்கும் பொறுப்புக் கூறப்படுவதற்கும் நாம் எப்போதும் குரல்கொடுப்போம்.' என்று அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். ●

---




# வியுக்தியார் பதில்கள்

**எம். அகிலேஸ்வரன்
சித்தன்கேணி.**

**கேள்வி:** இலங்கை மக்களுக்கு அவர்களின் ஜனாதிபதி, பிரதமரைக் காட்டிலும், இந்தியப் பிரதமர் மோடி மீது பெரிய நம்பிக்கையும், மரியாதையும் உள்ளது என்று பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் ராம. சீனிவாசன் கூறியுள்ளார். நுவரெலியா - சீதாஎலியவில் சீதை அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தில் பங்கேற்று தமிழ்நாடு சென்ற பின்னர் அளித்த நேர்காணல் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார். இது சரி என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**வியுக்தியார்:** அவர் நுவரேலியா வந்திருந்தபோது எத்தனை இலங்கை மக்களைச் சந்தித்திருப்பாரோ தெரியவில்லை. சிலவேளை அவரை இங்கு அழைத்துவந்த பிரமுகர்கள் அவரை குஷிப்படுத்த சொன்ன விசயத்தை மனுசன் சீரியசாக நம்பிவிட்டார் போலத்தான் இருக்கின்றது. இந்தக் கும்பாபிசேஷகத்திற்கு வந்திருந்த வாழும்கலை நிறுவனர் சிறி சிறி ரவிசங்கரைச் சந்தித்த அவரது சீடர்களும் இப்படித்தான் கூறியிருப்பார்கள், அதாவது 'நாங்கள் எங்கள் ஜனாதிபதி பிரதமரையும்விட உங்களைத்தான் மதிக்கிறோம்" என்று தான் அவரிடம் சொல்லியிருப்பார்கள்.

---

**சபா. சிவநாதன்,
குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் வழங்கப்பட்ட வரிச்சலுகைகளை கடுமையாக விமர்சித்த எதிர்க்கட்சி, அதாவது கோட்டாபய வரிகளை ரத்துச் செய்ததால்தான் நாட்டில் பொருளாதார நெருக்கடியே ஏற்பட்டது என்று கூறிய எதிர்க்கட்சி, தற்போது வரிச்சலுகையை தேர்தல் வாக்குறுதியாக மாற்றியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** கோட்டாபய தனது தேர்தல் வாக்குறுதியாக வரிகளை இரத்துச் செய்வதாக கூறியிருந்தார். அதன் பின்னரே அவர் வரிகளை இரத்துச் செய்தார். அதாவது, வரிகளை இரத்துச் செய்வதற்கு மக்கள் ஆணையைப் பெற்ற பின்னரே அவர் அதனை இரத்துச் செய்தார். அதனால் தான் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது என்றால், அதற்கு காரணம் மக்களும்தான். அவ்வாறு வரிகளை இரத்துச் செய்தால் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்று சாதாரண மக்களுக்கு தெரிந்திருக்கவும் நியாயமில்லை. ஆனால் அதனை குறைத்தாலோ அல்லது இரத்துச் செய்தாலோ மீண்டும் நெருக்கடி ஏற்படும் என்று தெரிந்துகொண்டும் அதுபற்றி தேர்தல் வாக்குறுதி அளிப்பதுதான் தவறானது.

---

**எம். கௌதம்,
அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:**: இந்தியாவின் அஹமதாபாத் விமான நிலையத்தில் குஜராத் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் சென்னையில் இருந்து சென்ற நான்கு இலங்கையர்கள் கடந்த 20 ஆம் திகதி கைது செய் யப்பட்டனர். அவர்கள் ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் அபிமானிகள் என்றும், ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் சூத்திரதாரி சஹ்ரானுடன் சேர்ந்து இயங்கியவர்கள் என்றும் கூறப்படுகின்றதே. இது பற்றி ஏதாவது வேறு தகவல்கள் உங்களுக்கு தெரிந்திருக்குமே?

**வியுக்தியார்:** எனக்கும் உங்களைப்போலத்தான் பத்திரிகைச் செய்திகள் மட்டும்தான் தெரியும். ஆனால், முன்னர் ஈஸ்டர் தாக்குதல் நடந்தபோதும் இந்தியாவில் தேர்தல் நடந்துகொண்டிருந்தது. அந்தத் தேர்தலில் குண்டு வெடிப்புக்கு முன்னர் நடந்த வாக்களிப்புக்களில் பாரதீய ஜனதாக் கட்சிக்கு கிடைத்த வெற்றியிலும் பார்க்க, குண்டு வெடிப்பிற்கு பிறகு நடந்த வாக்களிப்பு இடங்களில் அவர்களுக்கு அதிக இடங்களில் வெற்றி கிடைத்திருந்தது. எல்லோரும் அந்த தாக்குதலால் கோட்டாபாய ராஜபக்சதான் பயனடைந்தார் என்றுதான் இங்கு சொல்லி வருகிறார்கள். ஆனால் அந்த தாக்குதலால் உடனடி பயனை அடைந்தது பா.ஜ.க. தான். இப்போதும் இந்தியத் தேர்தல் நடந்துகொண்டிருக்கும்போது சில இலங்கையர்கள், அதுகும் குஜராத் மாநிலத்தில் கைதுசெய்யப் பட்டிருப்பதும், அவர்கள் இலங்கையிலிருந்து சென்ற ஐஎஸ்ஐஎஸ் அமைப்பினர் என்று சொல்லப்படுவதும் பல கேள்விகளை நமக்குள் ஏற்படுத்துவதை தவிர்க்க முடியவில்லையே கௌதம்.

---

**கந்தையா முகுந்தன்
சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** காற்றாலை மின் உற்பத்திக்கு மன்னார் பொருத்தமான பிரதேசம் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளாரே. குறிப்பாக கரைவலை மீன்பிடி சம்பந்தமான முறையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்றும், இதை வைத்தும், வேறு பல விடயங்களை வைத்தும் காற்றாலையை மன்னார் தீவுடன் சேர்ந்து அமைப்பது மன்னார் தீவுக்கு பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்பது புலனாகின்றது என்றும் அவர் கூறியிருக்கிறாரே.

**வியுக்தியார்:** அவர் சட்டத்துறையில் மாத்திரமன்றி சுற்றுச்சூழல் துறையிலும் வல்லுனர் என்பது அவரது அந்தச் செய்தியைப்படித்தபோதுதான் தெரியவந்தது. அவரது நண்பர் எரிக் சொக்கெய்ம் தான், இலங்கை ஜனாதிபதியின் சுற்றுச்சூழல் ஆலோசகர் என்பதால் அவரிடம் சொல்லியே இதனை ஆரம்பத்திலேயே தடுத்திருக்கலாமே. இப்போதும் கூட தாமதமாகிவிடவில்லை என்று தான் நினைக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# நியூ கலிடோனியாவில் பிரான்சுக்கு எதிராக போராட்டம்: அரசியலமைப்பு மாற்றத்தை எதிர்க்கும் பூர்வீக மக்கள் !




நியூ கலிடோனியா மக்கள் பிரான்சிடம் இருந்து சுதந்திர தனிநாடு வேண்டாம் என 2021 வருட இறுதியில் நடந்த பொது மக்கள் வாக்கெடுப்பில் தெரிவித்தனர்.

தற்போது நியூ கலிடோனியாவில் (New Caledonia) அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கு எதிராக சுதந்திர இயக்க ஆதரவாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் வன்முறையாக மாறியுள்ளது. நியூ கலிடோனியாவின் தலைநகர் நௌமியாவில் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தென் பசிபிக் பிரதேசத்தின் மாகாண தேர்தல்களில் வாக்குரிமையை மாற்றியமைக்கும் சர்ச்சைக்குரிய சட்டம் பாரிஸில் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து இந்த கலவரங்கள் ஏற்பட்டன.

பூர்வீக கானக்ஸ் மக்களின் ஆதரவாளர்கள் இந்த சட்டத்தை தங்கள் அரசியல் அதிகாரத்தின் மீதான நேரடி தாக்குதலாகவும், பிரான்ஸ் ஆதரவு வேட்பாளர்களை ஆதரிப்பதற்கான ஒரு தந்திரோபாயமாகவும் பார்க்கின்றனர்.

**பிரான்சிடம் இருந்து விடுதலை?**

பிரான்சிடம் இருந்து சுதந்திர தனிநாடாக வேண்டும் எனக்கோரும் நியூ கலிடோனியாவின் "கனாக்ஸ் சோசலிஸ்ட் தேசிய விடுதலை முன்னணி" சர்வஜன வாக்கெடுப்பை நடாத்த நியூ கலிடோனியா மக்களவையில் முன்பு கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் கடந்தகால சர்வஜன வாக்கெடுப்பு முடிவை அங்கீகரிக்க வேண்டாம் என்றும், அதை ரத்து செய்ய ஐக்கிய நாடுகள் சபையிடம் கனாக்ஸ் அமைப்பு முறையிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவிற்கு கிழக்கே 2,000 கிலோமீட்டர்கள் (1,250 மைல்கள்) தொலைவில் உள்ள சுமார் 290,864 மக்களை கொண்ட தீவுக்கூட்டம், சட்டப்படி, பரந்துபட்ட அளவிலான சுயாட்சியை கொண்டிருந்தாலும், பாதுகாப்பு மற்றும் கல்வி போன்ற விடயங்களுக்கு



பிரான்சையே இந்த பிராந்தியம் பெரிதும் சார்ந்துள்ளது.

**சுதந்திர இயக்க போராட்டம்:**

தேர்தல்களின் போது அதிகளவான பிரான்ஸ் குடியி ருப்பாளர்களை வாக்களிக்க அனுமதிக்கும் அரசியல மைப்பில் மாற்றம் வந்தமையால் அதற்கு எதிராகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த சீர்திருத்தமானது கனாக்ஸ் எனப்படும் பழங் குடி மக்களின் வாக்குகளை பலமி ழக்கச் செய்துவிடும் என சுதந்திர ஆதரவாளர்கள் அஞ்சுவதாக ஊடகங்கள் தெரிவிக் கின்றன.


இந்த நிலையில், போராட்டக்காரர்களு டனான மோதலில் பல பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. பல்வேறு கட்டிடங்கள் மற்றும் வணிக நிலையங்கள் சேதமடைந்துள்ளதுடன், வாகனங்கள் பலவும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

**பிரான்ஸ் ஆட்சி பகுதியில் கலவரம்:**

பதற்றங்கள் வேகமாக அதிகரித்து, போராட்டங்கள் பாதுகாப்பு படையினருக்கு இடையே வன்முறை மோதல்களாக உருவெடுத்தன. இந்த வன்முறையில், குறைந்தது நான்கு பேர் உயிரிழந்து, நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் தீ வைக்கப்பட்டதன் மூலம் சொத்துக்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. போராட்டக்காரர்கள் நடத்திய சாலை மறியல்கள் காரணமாக மருந்து மற்றும் உணவு போன்ற அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாட்டிற்கு வழிவகுத்ததால், இந்த சூழ்நிலை விநியோக சங்கிலியையும் பாதித்துள்ளது.

கலவரங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியில், பிரான்ஸ் அதிகாரிகள் நியூ கலிடோனியாவில் அவசர நிலையை அறிவித்தனர். இந்த நடவடிக்கை அவர்களுக்கு விரிவடைந்த அதிகாரங்களை வழங்குகிறது. இது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த, கூட்டங்களைத் தடைசெய்ய மற்றும் ஒழுங்கை மீட்டெடுக்க அனுமதிக்கிறது.



**நியூகலிடோனிய பொது வாக்கெடுப்பு:**

பிரெஞ்சு நிலப்பகுதியிலிருந்து தனித்து, பசுபிக் தீவுகளை உள்ளடக்கிய பிராந்தியமான நியூ கலிடோனியாவில் உள்ள மக்கள் பிரான்சிலிருந்து பிரிந்து சுதந்திர நாடாவதற்கு இரு தடவைகள் ஏற்கனவே எதிராக வாக்களித்துள்ளனர்.

இதுதொடர்பாக நடந்த பொது மக்கள் கருத்தறியும் முதலாவது வாக்கெடுப்பில், 53.26 சதவீத நியூ கலிடோனியா மக்கள் தொடர்ந்து பிரான்ஸுடன் இணைந்திருப்பதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். இந்த பொது வாக்கெடுப்பில் அந்த பிராந்தியத்தை சேர்ந்த 85.6 சதவீத மக்கள் பங்கேற்றிருந்தனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த இதேபோன்ற இரண்டாவது பொது வாக்கெடுப்பில், இதைவிட அதிகமாக மக்கள், அதாவது 56.7 சதவீத மக்கள் பிரான்சின் அங்கமாக தொடர ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

ஆயினும் மற்றொரு சர்வஜன வாக்கெடுப்பை நடாத்த நியூ கலிடோனியா மக்களவையில் "கனாக்ஸ் சோசலிஸ்ட் தேசிய விடுதலை முன்னணி" கோரிக்கை விட்டுள்ளது.

**நீண்ட பிரெஞ்சு ஆதிக்கம் :**

*1976 மற்றும் 1988 க்கு இடையில்,* பிரெஞ்சு அரசாங்கத்திற்கும் கனாக்ஸ் சுதந்திர இயக்கத்திற்கும் இடையிலான மோதல்கள், கடுமையான வன்முறையால் இந்நாடு பாரிய சீர்குலைவுகளையும், அவலங்களையும் அக்காலங்களில் கண்டது.




பிரான்சுக்கு எதிரான கனாக்ஸ் சுதந்திர இயக்கம் பூர்வீக மக்களின் ஆதரவைப் பெற்றது. அவர்களின் கீழ் சமூகத்தில் விரக்தியடைந்த, பொருளாதார நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் பிரெஞ்சு ஆதிக்க சுரண்டலை வலுமையாக எதிர்த்தனர்.

நீண்ட கால போராட்டத்தின் பின்னர், இத்தீவுகளில் பதற்றத்தைத் தணிக்கும் நோக்கில் 1988 ஒப்பந்தத்தின் கீழ் சர்வதேச மேற்பார்வையில் மூன்று சுதந்திர வாக்கெடுப்புகளுக்கு ஐ.நா சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அத்துடன் 1998ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நோமியா உட்பட பல ஒப்பந்தங்கள் இந்த பிரதேசத்திற்கு அதிக சுயாட்சிக்கான அங்கீகாரத்தை பெற்றுத் தந்தது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், நியூ கலிடோனியாவில் சுதந்திரம் குறித்து அதிகபட்சம் மூன்று பொது மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்புகள் நடத்த அனுமதிக்கப்பட்டது.

அத்துடன் உள்ளூர் சட்டமன்றத்தில் மூன்றில் ஒரு பகுதியினர் கோரினால், 2022 பின்னர் மற்றொரு வாக்கெடுப்பும் நடைபெற உத்தேசிக்கப்பட்டது.

**மீள சுதந்திர வாக்கெடுப்பு :**

மேலும் கனாக்ஸ் சுதந்திர ஆதரவு இயக்கம் நியூ கலிடோனியாவின் எதிர்கால வளர்ச்சிக்கு அதன் பிராந்திய கவுன்சிலுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட கோரியுள்ளது. அத்துடன் நியூ கலிடோனியாவின் மக்கள் பிரான்சுடன் தொடர்ந்து வாழ விரும்பும் திட்டம்பற்றி முடிவு செய்ய மற்றொரு வாக்கெடுப்பு நடாத்தவும் கோரியது.

நியூ கலிடோனியா கனாக்ஸ் சுதந்திர ஆதரவு இயக்கம் கடந்தகால சர்வஜன வாக்கெடுப்பு முடிவை அங்கீகரிக்க வேண்டாம் என்றும், அதை ரத்து செய்யவும் ஐக்கிய நாடுகள் சபையிடம் முறையிட்டுள்ளது.

நிலமைகளை ஆராய்ந்த பின்னர் பிரெஞ்சு குடியரசு நியூ கலிடோனியாவின் புதிய நிலை குறித்த வாக்கெடுப்பு மீள நடைபெறும் என்றும் அறிவித்துள்ளது. ஆனால் இதன் முழுமையான விவரங்கள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

கனாக்ஸ் சுதந்திர ஆதரவு இயக்கமான "கனாக்ஸ் சோசலிஸ்ட் தேசிய விடுதலை முன்னணி"கடந்தகால சர்வஜன வாக்கெடுப்பு முடிவை அங்கீகரிக்க வேண்டாம் என்ற கோரிக் கையினால் 1980 களில் சுதந்திரத்திற்கு ஆதரவான கனாக்ஸ்களுக்கும் சுதந்திரத்தை எதிர்த்த வெள்ளை பிரெஞ்சு மக்களுக் கும் இடையே மோதல்கள் வெடித்து பதட் டங்கள் மீண்டும் வன்முறையைத் தூண்டும் என்று மேற்குலக அவதானிகள் அஞ்சுகின்றனர்.



ஆயினும் பிரான்ஸ் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரத்தை வேண்டி நிற்கும் பூர்வீக மக்களின் உரிமைக் குரலை சர்வ தேசமும், ஐ.நாவும் இலகுவாக தட்டிக்கழிக்க முடியாது எனப் புலப்படுகிறது.

நியூ கலிடோனியாவில் அரசியலமைப்பு சீர்திருத்த திற்கு எதிராக சுதந்திர ஆதரவாளர்களின் போராட்டம் முற்றுப் பெறாமல் வன்முறை இன்னமும் தொடர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்கள் முறிந்து விழும் ஆபத்து இருந்தால் 117 என்ற துரித இலக்கத்துக்கு அறிவிக்கவும்

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சு கோரிக்கை

கொழும்பு, மே. 26

நாட்டில் எப்பிரதேசத்திலும் அனர்த்த நிலைமை அல்லது மரம் முறிந்துவிழும் ஆபத்து இருக்குமானால் அது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் 117 என்ற துரித இலக்கத்துக்கு அறிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீரற்ற காலநிலை தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு செய்கிறது. அதனால் வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிவித்தல்களின் பிரகாரம் செயற்படுவது அனைவரதும் கடமை. அதனால் சீரற்ற காலநிலையால்



ஏற்படும் அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பு பெற வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிவித்தல்களுக்கு கவனம்செலுத்துமாறு நாங்கள் நாட்டு மக்களை கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் மரங்கள் முறிந்து விழும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. ஆனால் தொடர்பாக இதுவரை கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக தெரியவில்லை. மரங்கள் விழுவது தொடர்பாக எச்சரிக்கை விடுப்பதற்கென ஒரு நிறுவனம் எமது நாட்டில் செயற்படுவதில்லை. இவ்வாறான எச்சரிக்கை விடுக்கும் பொறுப்பை கட்டட ஆராய்ச்சி நிறுவனத்துக்கு நாங்கள் வழங்கி இருக்கிறோம். அந்த துறையை முன்னேற்றவேண்டும். துறைசார் நிபுணர்களை இதற்கு இணைத்துக்கொள்ள வேண்டும். அதேபோன்று தேசிய கொள்கை அமைக்கவேண்டும். இது தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பாரிய பொறுப்பு இருக்கிறது.

அதேநேரம் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கு பிரதான காரணமாக இருப்பது, உள்ளூராட்சி நிறுவனங்களின் அனுமதி இல்லாமல் கட்டுமானங்களை அமைப்பதற்கு அனுமதிப்பதாகும். சட்டவிரோத கட்டடங்களை நிறுத்துவதற்கு அனுமதியளிப்பதில் ஏற்பட்டிருக்கும் தாமதிப்பை மறைக்க வேண்டாம் என அந்த நிறுவனங்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

எனவே நாட்டில் எப்பிரதேசத்திலும் அனர்த்த நிலைமை அல்லது மரம் முறிந்துவிழும் ஆபத்து இருக்குமானால் அது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் 117என்ற துரித இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும். அதேபோன்று கிராம சேவகர் ஊடாக பிரதேச செயலாளரை அறிவுறுத்த முடியும்- என்றார். (அ)

# ரஷ்ய-உக்ரைன் போருக்காக ஆட்கள் அனுப்பிய 2 பேர் கைது!

கொழும்பு, மே. 26

ரஷ்ய-உக்ரைன் போருக்காக இலங்கையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ உறுப்பினர்களை அனுப்பி ஆட்கடத்தலில் ஈடுபட்டமை தொடர்பில் ஓய்வு பெற்ற மேஜர் ஒருவரும் அவரது மனைவியும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர் வத்தளையிலும் அவரது மனைவி பொரளையிலும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் குறித்த நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், மனைவி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# பல பகுதிகளில் மின் தடை!

கொழும்பு, மே. 26

சீரற்ற காலநிலையினால் இலங்கையில் 431, 500 பேர் மின் தடை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மின் தடை தொடர்பில் நாளாந்தம் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதால், அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் மீள பதிலளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 4 நாட்களில் 59,400 மின்சார செயலிழப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், கிடைக்கப் பெற்றுள்ள 3300,000 இற்கும் அதிகமான முறைப்பாடுகளுக்கு அமைய மின் தடங்கல்களைச் சீரமைக்கும் பணிகளை துரிதப்படுத்தியுள்ளதாகவும் இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நேற்று முன்தினம் வரை 330,000 பேருக்கான மின்சார விநியோகத்தை வழமைக்குக் கொண்டு வந்துள்ளதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ)



# ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்வு இடம்பெற்ற பகுதியில் விபத்து

கிளிநொச்சி, மே. 26

ஜனாதிபதி கலந்துகொண்ட நிகழ்வு இடம்பெற்ற பகுதியில் இடம்பெற்ற விபத்தினால் வாகன நெரிசல் ஏற்பட்டதை அடுத்து வாகன நெரிசலை கட்டுப்படுத்த பொலிசார் தீவிரமாக செயற்பட்டனர்.

கிளிநொச்சி வைத்தியசாலைக் கட்டடம் திறப்பதற்காக நேற்று ஜனாதிபதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்தார்.

இந்த நிலையில், காலை 8.30 மணியளவில் குறித்த விபத்து கிளிநொச்சி வைத்தியசாலை முன்பாக இடம்பெற்றது. இதனால் குறித்த பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த ரிப்பர் வாகனம் வீதி ஓரத்தில் வைக்கப்பட்ட பாதுகாப்பு அமைப்பு கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# சம்பள விவகாரத்தில் முரண்பட்டால் கம்பனிகளின் ஒப்பந்தம் இரத்தாகும்!

கொழும்பு, மே. 26

தொழிலாளர்களுக்காக உயர்த்தப்பட்ட சம்பளத்தை வழங்க முடியாத விடயம் கம்பனிகளின் உள்ளக பிரச்னையாக இருந்தால் அந்த நிறுவனங்களுடனான ஒப்பந்தங்களை இரத்து செய்து புதிய முதலீட்டாளர்களுக்கு வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்காக வெளியிட்டு வர்த்தமானி 21 ஆம் திகதி அமுலுக்கு வந்துள்ளதுடன், அன்றைய தினம் முதல் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் 1350 ரூபாவாகவும் விசேட கொடுப்பனவு 350 ரூபாவும் சேர்ந்து மொத்த சம்பளம் 1700 ரூபா அதிகரிக்கப்பட்டமை உறுதியானது எனவும் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கூறினார்.

அத்தோடு, 24 பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு அரசுக்கு சொந்தமான தோட்டக் காணிகளை குத்தகைக்கு வழங்கியுள்ளதாகவும், அதில் எவரேனும் அதிகரிக்கப்பட்ட தொகையை செலுத்த முடியாது என தெரிவித்தால், அது தொடர்பில் ஆராய நிதியமைச்சு குழு வொன்றை நியமிக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# பாணந்துறை கடலில் மூழ்கிய ஐவர் மீட்பு!

கொழும்பு, மே. 26

பாணந்துறை கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த ஐவர் பொலிஸ் உயிர் காப்பு பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளதாக பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

புலத்சிங்கள, அயகம மற்றும் அலுபோமுல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 19,20,23 மற்றும் 29 வயதுடைய ஐந்து நபர்களே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஐவரும் பாணந்துறை கடலில் நீராடிக்கொண்டிருக்கும்போது திடீரென நீரில் மூழ்கியுள்ள நிலையில் அங்குக் கடமையிலிருந்த பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் இவர்களைக் காப்பாற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஞானசாரவை மன்னித்து விடுதலை செய்தால்...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்சாக்கள் கடைப்பிடித்த இனவாத அணுகுமுறையை மணிச்சுருக்கமாக கூறுகிறது. அதற்கு பாரிய பங்களிப்பை ஞானசார செய்திருந்தார். அதனால் அவர் ராஜபக்ச ஆட்சியில் சட்டத்துக்கு பயப்படாமல் எதையும் பேசவும் எதையும் செய்யவும் கூடியதாக இருந்தது.

ஆட்சிமாற்றம் ஒன்று இடம்பெறாவிட்டால் ஞானசாரவுக்கு இன்றைய கதி ஏற்பட்டிருக்குமா என்ற கேள்வியைக் கேட்காமல் இருக்கமுடியவில்லை.

கோட்டாபயவின் ஆட்சியில் முழு நாட்டுக்கும் ஒரே சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டம் ஒன்றை வரையும் பணி ஒப்படைக்கப்பட்ட ஜனாதிபதி செயலணிக்கு தலைவராக ஞானசார நியமிக்கப்படும் அளவுக்கு ராஜபக்சாக்களுக்கு தேவையானவராக அவர் விளங்கினார் என்பது மாத்திரமல்ல அவரைப் போன்ற நிதான புத்தியில்லாத ஒருவரின் வழிநடத்தலில் வரையப்படக்கூடிய சட்டம் ஒன்றை முழுநாட்டுக்கும் பொதுவானதாக்கவும் ராஜபக்ச தயாராக இருந்தார்கள்.

பௌத்த மதத்தின் கோட்பாடுகளுக்கும் பொதுவில் மகாசங்கத்துக்கும் களங்கத்தை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற பிக்குமார் அரசியல் உயர்மட்டத்தின் முழுமையான அனுசரணையைக் கொண்டவர்களாகவே நெடுகவும் இருந்து வந்திருக்கிறார்கள். சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகள் மறுக்கும் அரசியலை முன்னெடுப்பதற்கு முன்னரங்கப் படைகளாக பிக்குமார் விளங்கிவருகிறார்கள்.

மட்டக்களப்பு சிறிமங்களராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரர் நெடுகவுமே அடாவடித்தனமான செயல்களில் ஈடுபடுபவர். இதை முழு நாடும் அறியும். கிழக்கில் சில மாதங்களுக்கு முன்னர் நடுவீதியில் நின்று தென்னிலங்கையில் வாழும் தமிழர்களை துண்டுதுண்டாக வெட்டுவேன் என்று ஆவேசமாக கதறினார். ஆனால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி எவரோ அறிவுறுத்தியிருக்க வேண்டும். அவர் மறுநாளே தனது செயலுக்கு மன்னிப்புக்கேட்டு காணொளி ஒன்றை வெளியிட்டார்.

ஆனால் அவரின் ஆவேசப் பேச்சு வெறுமனே ஒரு மன்னிப்புக் கோரலுடன் மறந்துவிடக்கூடியதோ மன்னிக்கப்படக்கூடியதோ அல்ல. அவரைப்போன்று வேறு ஒரு மதத்தைச் சேர்ந்த மதகுரு ஒருவர் காடைத்தனமாக நடந்திருந்தால் அவரை பொலிசார் எவ்வாறு நடத்தியிருப்பார்கள்? சட்டம் அவர்களை என்ன செய்திருக்கும்?

அரசியல் அனுசரணை இல்லாவிட்டால் ஞானசார போன்ற பிக்குமார் முழு இலங்கைச் சமூகத்துக்குமே அவமதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக அடாவடித்தனமாகச் செயற்பட்டிருக்கமுடியாது. இலங்கைச் சமுதாயம் அரசியலில் இருந்து மதத்தை பிரிக்காவிட்டால் நாட்டுக்கு எதிர்காலமே கிடையாது. ஆனால் அதற்கான எந்த நம்பிக்கையையும் வளர்க்கக்கூடியதாக இலங்கையில் நிலைவரங்கள் இல்லை என்பது பெரும் கவலைக்குரியது.

இறுதியாக ஞானசாரவுக்கு மீண்டும் மன்னிப்பு அளித்து சிறையிலா இருந்து விடுதலை செய்தால் ஆபத்தான செய்தியை சமூகத்துக்கு கூறுவதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித்...

குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் முதலில் ஜனாதிபதித் தேர்தலே இடம்பெறவுள்ளது. ஜனாதிபதி அமைச்சரவைக்கு தெளிவாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

இந்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். அதன் பின்னரே பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்காக மக்கள் கருத்துக்கணிப்பு பெறப்படவுள்ளதாக கூறப்படும் தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.

அவ்வாறான எந்தவொரு தேவையும் அரசாங்கத்துக்கு கிடையாது - என்றார்.

## அர்த்தமுள்ள...

சேவைகளுக்கான சிறப்பு நிலையம் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே சுமந்திரன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய இரண்டு பகுதிகளும் அரசாங்க அதிகாரம் முழுமையாக விநியோகிக்கப்பட வேண்டிய இரண்டு பகுதிகள் என்பதை நாங்கள் அறிவோம். குறிப்பாக யாழ்ப்பாண வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக மாற்றுவதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட முயற்சிகளுக்கு நாம் நன்றி கூறுகின்றோம்.

எந்தவொரு சமூகத்தின் இருப்பிலும் சுகாதாரப் பாதுகாப்பு ஓர் அடிப்படைப் பகுதியாகும். மேலும், பெண்கள் சுகாதார சேவைகளுக்கான இந்த சிறப்பு மையத்தை உருவாக்க தங்களை அர்ப்பணித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார். (அ)

## போராட்டங்கள்...

இன்று (நேற்று) கிளிநொச்சிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அவரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் ஒன்றை நிகழ்த்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அந்த போராட்டத்துக்கு நீதிமன்ற தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

எமது பிள்ளைகளை யுத்த காலத்தில் இராணுவத்திடம் கையால் ஒப்படைத்தும் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டு இன்றுவரை எமக்கான நீதி கிடைக்கப்பெறவில்லை.

எத்தனையோ போராட்டங்கள் வாயிலாக ஊடகங்கள் வாயிலாக தெரிவித்தும் இதுவரை எமக்கான நீதி கிடைக்கவில்லை.

கடந்த யுத்த காலங்களில் உண்ண உணவின்றி உப்பு கஞ்சி குடித்து உயிரை காத்து கொண்டோம்.அதனை சர்வதேசத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் எடுத்து காட்டும் முகமாக மே18 முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டுவந்தது.

குறித்த நினைவுக் கஞ்சிகளை இராணுவம் மற்றும் பொலிஸார் காலால் தட்டி சுகாதார கேடு எனப் பலரை கைது செய்துமுள்ளனர்.

ஆனால் இன்று நாடு பூராகவும் வெசாக் பெருநாளை கொண்டாடி வருகின்றனர். ஆனால் இதுவரை எந்த குழப்பங்களும் இல்லாமல் நடத்துகின்றனர்.

அப்படி என்றால் தமிழருக்கு ஒரு சட்டம் சிங்களவர்களுக்கு ஒரு சட்டமா என கேள்விகள் எழுந்துள்ளன. இந்த காரணங்களுக்காகவே ஜனாதிபதியின் வருகையை இன்று எதிர்த்து சர்வதேச நாடுகளுக்கு உணர்த்தும் வகையில் ஊடகங்கள் வாயிலாக இதனைச் சுட்டிக் காட்டுகின்றோம் - என்றார். (அ)

## தமிழ்க்...

ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை சஜித் பிரேமதாஸ முழுமையாகத் தருவதாக கூறியுள்ளமை தொடர்பாக ஜனாதிபதியுடன் நான் உரையாடிய போது அதற்கு அவர், பொலிஸ் அதிகாரமற்ற 13ஆம் திருத்தச் சட்டத்தையே தருவதாக சஜித் கூறினார். அதனையே நானும் ஏற்கனவே கூறியுள்ளேன் என்று தெரிவித்தார். வேண்டுமானால் சஜித்துடன் முழுமையாகப் பேசிப் பாருங்கள் என்றும் கூறினார். (ஐ)

## அரசியல்...

நேற்று பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனை வீடு தேடிச் சென்று சந்தித்தார் ஜனாதிபதி ரணில்.

இதன் போது நடந்த பேச்சில் , வடக்கு, கிழக்கில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதுதான் அரசின் முக்கியமான வேலை. அதுவே முதலில் செய்ய வேண்டியது. அரசியல் தீர்வு விடயங்கள் தொடர்பில் இப்போது அவசரம் காட்ட வேண்டியதில்லை. அதனைப் பிறகு பார்க்கலாம். என்ற தொனியில் ஜனாதிபதி தன்னிடம் தெரிவித்தார் என்று விக்னேஸ்வரன் எம்.பி. குறிப்பிட்டார். (அ)

## சீரற்ற...

நிலவும் சீரற்ற காலநிலையால் 12 ஆயிரத்து 197 குடும்பங்களைச் சேர்ந்த 45 ஆயிரத்து 344 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

12 வீடுகள் முழுமையாகவும் 2,797 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன. (அ)

## கிளிநொச்சி...

மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இரணைமடுச் சந்தியில் அமைந்துள்ள நெலும்பியச மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்தை உரிய காலத்தில் எம்மால் முடிக்க முடியவில்லை.

ஆனால் இன்று நாம் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளோம். இன்று கிளிநொச்சி நகரில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

மாங்குளம் பிரதேசத்தில் முதலீட்டு வலயம் ஒன்றை உருவாக்கி அதன்மூலம் இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய நாம் திட்டமிட்டுள்ளோம்.

இந்த பிரதேசத்தில் வலுசக்தித் திட்டங்களை மீள உருவாக்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கியுள்ளோம்.

கிளிநொச்சியில் இவ்வாறான செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அனுமதியும் நாம் ஏற்கனவே வழங்கியுள்ளோம். இந்தப் பிரதேசங்களில் உள்ள காணிப் பிரச்னைகள் மற்றும் காணாமற்போனோர் பிரச்னை தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

எமது நாட்டில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்க எந்தச் சட்டமும் இருக்கவில்லை. அரசியல் யாப்பில் உள்ள அடிப் படை உரிமைகள் மாத்திரமே இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

எனவே, பெண்களுக்கான இரண்டு புதிய சட்ட மூலங்களை தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம். பெண்களின் உரிமைகள் சட்டபூர்வ மாக்கப்பட வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அதற்கேற்ப அந்த சட்டத்தின் கீழ் நாங்கள் பணியாற்ற முடியும். மேலும், வீட்டில் இருக்கும் பெண்களின் பாதுகாப்பையும் கவனிக்க வேண்டும்.

இந்த பெண்கள் உரிமை சட்ட மூலங்கள் ஏற்கனவே இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

அந்த சட்ட மூலங்களை அனைவரும் படித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (அ)

## அரசின்...

குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கடிதத்தில், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களிலுமுள்ள நிரந்தர அரச அதிபர்கள் ஓய்வு பெற்று சுமார் 03 மாதங்களாகியும் நிரந்தர அரச அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை.

மேலதிக அரச அதிபர்கள் அந்த கடமைகளை உள்ளடக்கி உள்ளனர். தகுதியான தமிழ் சிறப்பு தர இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் நியமனத்திற்கு தகுதி இருந்தும் முக்கியமான பொதுப் பதவிகளுக்கு இந்த மூத்த அதிகாரிகளின் நியமனங்களை அரசியல் தடுக்கக் கூடாது. மேலும், வட்டாட்சியர் அலுவலகத்தில் 04 செயலர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

சுகாதாரம், கல்வி மற்றும் மகளிர் விவகார அமைச்சகங்கள். ஆனால் தரம் 1 அதிகாரிகள் செய்கிறார்கள்.

கல்வி அமைச்சு, மகளிர் விவகார அமைச்சு மற்றும் ஆளுநர் அலுவலகத்தில் கடமையாற்றுகின்ற அதேவேளை விவசாய அமைச்சின் செயலாளர் சுகாதார அமைச்சின் செயலாளராக செயல்படுகின்றார். குகநாதன், ஸ்ரீ, திருமதி எழிலரசி மற்றும் அருள்ராஜ் போன்ற மூத்த சிறப்பு அதிகாரிகளும், அரசியல் காரணங்களுக்காக, அரச அதிபர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் பதவியில் இருந்து புறக்கணிக்கப்பட்டு, பறிக்கப்படுகிறார்கள்.

முக்கியமான நிர்வாகப் பதவிகளுக்கு மூத்த இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளை நியமிப்பதை ஆளுநர் வெறுக்கிறார். அதற்கு பதிலாக அவர் அந்த பதவிகளை நிர்வகிக்கும் இளைய கூட்டாளிகளை விரும்புவதாக தெரிகிறது.

இதனால் இந்த சிரேஷ்ட இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளின் பெறுமதியான சேவைகளை பொதுமக்கள் இழக்கின்றனர். நிரந்தர உத்தியோகத்தர்களை அரச அதிபர்கள் மற்றும் செயலாளர்களாக விரைவில் நியமிக்க உங்களது உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்- என்றுள்ளது. (அ)

## தமிழினம்...

ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து தொடர்பில் எம்.கே.சிவாஜிலிங்கம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், இணைந்த வடக்கு கிழக்குக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு என்பதுதான், சர்வதேச மட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் இலங்கை அரசும் சேர்ந்து இணங்கிக் கொண்ட விடயம். அதற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் முடிவு எதையும் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத் தில் எடுக்கக்கூடாது என்று தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் சம்பந்தன் ஐயா கூறியிருக்கின்றார்.

இலங்கை அரசு இன்னமும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை ஈழத் தமிழர்களின் இனப்பிரச்னை தீர்வாகக் கொண்டுள்ளது என்பது அடி முட்டாள்தனமான நம்பிக்கை.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைப்பிற்கான பொதுமக்கள் வாக்கெடுப்பு கிழக்கு மாகாணத்தில் நடைபெறாமலேயே உயர் நீதிமன்ற தீர்ப்பின் படி தற்காலிக இணைப்பு பிரிக்கப்பட்டு, 18 ஆண்டுகள் கடந்து விட்டன.

அந்தத் தீர்ப்பிலேயே அன்றைய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, மாகாண சபைகள் இலக்கம் 42ஆம் படி அருகருகே இருக்கக்கூடிய இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் தீர்மானத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றி இணைக்க முடியும் என தெரிவித்திருந்தார்.

உள்ளக சுயநிர்ணய உரிமை என ஐக்கிய நாடுகள் சபையின் நியமங் களின் அடிப்படையிலோ அல்லது சர்வதேச சட்டங்களிலோ கிடையாது. சுயநிர்ணய உரிமை என மாத்திரமே (RIGHT TO SELF - DETERMINATION) குறிப்பிடப்பட்டுள்ளது.

இலட்சக் கணக்கான ஈழத் தமிழர்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள். எனவே பொதுமக்கள் வாக் கெடுப்பை வடக்கு-கிழக்கு மாகா ணங்களில் நடத்த முடியாது என சம்பந்தன் ஐயா கூறுவது தவறானது.

ஐக்கிய நாடுகள் சபையினால் அல்லது சர்வதேச சமூகத்தினரால் நடத்தப்படும் சுதந்திரத்திற்கான பொதுமக்கள் வாக்கெடுப்பு (INDEPENDENCE REFERNDUM) புலம்பெயர் மக்கள் தாங்கள் வாழும் நாடுகளி லேயே வாக்களிக்க முடியும் இதற்கு பல நாடுகளில் நடைபெற்ற வாக்களிப்புக்களை உதாரணமாகக் கூற முடியும்.

நோர்வே நாட்டின் ஒஸ்லோ நகரில் 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி இலங்கை அரசாங் கப் பிரதிநிதிகளுக்கும், தமிழீழ விடுத லைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையின் முடிவில் வெளியி டப்பட்ட கூட்ட அறிக்கையில், சமஷ்டி பற்றி ஆராய்வதற்கு இணங்குவது என்றே குறிப்பிடப்பட்டி ருந்தது.

ஆனால் 2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப் பில் அரசியல்துறை பொறுப்பாளர் அமரர் தமிழ்ச்செல்வனால் கிளி நொச்சியில் வைத்து நோர்வே நாட்டின் அமைச்சர் எரிக்சொல் ஹெய்மிடம் கையளிக்கப்பட்ட தீர் வுத் திட்ட யோசனையை இலங்கை அரசு புலிகளுடன் பேசாமலேயே நிராகரித்திருந்தது.

இலங்கை தீவுக்கு சுதந்திரம் கிடைத்தது என்று சொல்லப்பட்டு 75 ஆண்டுகள் கடந்தும், இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப் பட்டு 50 ஆண்டுகள் கடந்தும், இனிமேலும் இலங்கை அரசு ஈழத் தமிழ் மக்க ளுக்கு அரசியல் தீர்வை தரும் என நம்புவது பைத்தியக்காரத்தனமானது, முட்டாள்தனமானது.

அடிக்கடி சம்பந்தன் ஐயா ஈழ தமிழ் மக்களுக்கு உள்ளக சுய நிர்ணய உரிமை மறுக்கப்பட்டால் எமக்கு வெளியக சுய நிர்ணய உரிமையை கோரும் உரித்து உண்டு எனவும் கூறுவார். ஈழத் தமிழ் இனம் அழிந்த தன் பின்னர் தான் சம்பந்தன் ஐயா வெளியக சுய நிர்ணய உரிமையைக் கோரப் போகின்றாரா?

தமிழ் கட்சிகளோ அல்லது அதன் தலைவர்களோ எமக்கு தீர்வு சமஷ்டி என்றோ கூட்டு சமஷ்டி என்றோ என்றோ தீர்மானிக்க முடியாது.

சுய நிர்ணய உரிமை என்பது தமக்கு என்ன தீர்வு வேண்டும் என் பதை அந்த மக்களே தீர்மானிக்க வேண்டும்.

சமஷ்டி தீர்வுக்காகவோ அல்லது கூட்டு சமஷ்டித் தீர்வுக்காகவோ சர்வதேச மத்தியஸ்தம் சாத்தியமில்லை. உள்நாட்டிலேயே உள்ள தீர்வை உள்நாட்டிலேயே பெற வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது சர்வதேச சமூகமும் கூறும்.

எனவே, ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் அல்லது சர்வதேச சமூகத்தினரால் நடத்தப்படும் பொதுமக்கள் வாக்கெடுப்பை நாங்கள் கோருகின்றோம் என்ற செய்தி சர்வதேச சமூகத்திற்கு இந்த ஜனாதிபதித் தேர்தல் மூலம் சொல்லப்பட வேண்டும். இந்த விடயங்களை தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் சம்பந்தன் ஐயா உட் பட ஈழத் தமிழினத்தின் கவனத்திற்கு சமர்ப்பிக்க விரும்புகின்றேன் - என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

நிறுவனங்கள், தனிநபர்கள் கடந்த ஆண்டில்

# செலுத்தவேண்டிய வரி 106,608 கோடி ரூபாய்

## மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு , மே 26

நாட்டில் 2023 ஜனவரி 1 தொடக்கம் டிசம்பர் 31 வரை பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் செலுத்த வேண்டிய மொத்த வரித் தொகை 106,608 கோடி ரூபாய் என்று மத்திய வங்கி அறிவித்துள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஒரு கோடி ரூபாய்க்கு மேல் பணம் செலுத்தத் தவறியவர்களின் எண்ணிக்கை 4,479 என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1 கோடி ரூபாய் தொடக்கம் 1.5 கோடி ரூபாய் வரை வரி செலுத்தாதவர்களின் எண்ணிக்கை 3,108. இதில் மது உற்பத்தி செய்யும் 28 நிறுவனங்களும் அடங்கும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரளவின் கருத்தின் படி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இந்தத் தொகையை அதிகம் அறவிட வேண்டும் என்றும் அந்தத் தொகை 105,600 கோடியாகும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தொடர்பான 350 நிலுவையில் உள்ள வரி வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளதாகவும், அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் இருந்து 2,934 முறையீடுகள் மற்றும் வரி ஆணைக்குழுவிடம் இருந்து 1,505 முறையீடுகள் நிலுவையில் உள்ளதாகவும் பேராசிரியர் சுட்டிக் காட்டியுள்ளதாக சிங்கள வார ஏட்டின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பெரமுன உறுப்பினர்களை களத்தில் இறங்கப் பணிப்பு

கொழும்பு, மே. 26

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடைபெறவுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்களுக்கு விசேட உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அர்த்தமற்ற கருத்துக்களை பகிராமல் கிராமத்திற்கு சென்று வாக்குகளை சேகரிக்கும் பணிகளை முன்னெடுக்குமாறு பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகி யோர் தமது உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளனர்.

தேர்தல் வேட்பாளர்களின் கருத்துக்களுக்கு செவி சாய்க்காமல் மக்கள் சேவைகளை தொடருமாறு மகிந்த ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கட்சியின் செயற்பாட்டாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

எனினும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் யார் என்பது தொடர்பாக பொதுஜன பெரமுன கட்சிக்குள் தொடர்ந்தும் குழப்பங்கள் நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

சீரற்ற வானிலை:

# மீட்புப் பணிகளுக்கு 42 குழுக்கள் தயார்!

கொழும்பு, மே. 26

வெள்ளம் காரணமாக ஏற்பட் டுள்ள அனர்த்தத்தை எதிர்கொள்வதற்காக 150 இற்கும் மேற்பட்ட கடற்படையினரை உள்ளடக்கிய 42 குழுக்கள் தயார் நிலையில் உள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. அத்துடன் திடீர் வெள்ள அனர்த்தத்தில் இருந்து பொதுமக்களை மீட்பதற்காக மூன்று விமானங்கள் தயார் நிலையில் உள்ளதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

இரத்மலானை, கட்டுநாயக்க, ஹிங்குராக்கொடை ஆகிய பகுதிகளில் குறித்த விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும் அவசர வெள்ள நிலைமையில் இருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்காக அனைத்து மாவட்டங்களிலும் படையினர் தயார் நிலையில் உள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சீரற்ற வானிலை காரணமாக நாட்டின் 7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண் சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது. (அ)

# மோசடியற்றவர்களுடனேயே சுதந்திரக் கட்சியின் கூட்டணி

## கூறுகிறார் அமைச்சர் விஜயதாச



கொழும்பு, மே. 26

**ஊழல் மோசடிகளில் தொடர்புபடாதவர்களுடனேயே சுதந்திரக்கட்சியின் புதிய அரசியல் கூட்டணி அமைக்கப்படும் என அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.**

கொழுமம்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாக நாம் பல அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம்.

எதிர்வரும் ஒரு சில வாரங்களுக்குள் நாம் கூட்டணி தொடர்பான இணக்கப்பாட்டை எட்டுவோம்.

அரசியல் கட்சிகள் பல எம்முடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தன. கலந்துரையாடல்கள் வெற்றியளித்துள்ளன.

அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் பலர் தேர்தலில் எம்முடன் இணைந்து செயற்படுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ஊழல் மோசடிகளில் தொடர்புபடாதவர்களுடனேயே நாம் கூட்டணி அமைப்போம்.

சுதந்திரக் கட்சியை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு எதிர்ப்பார்த்துள்ளோம்.

ஊழல் மோசடியாளர்கள் பலர் கட்சியை அரசியல் தேவைக்காகக பயன்படுத்தினார்கள் அவ்வாறானவர்களுக்கு கட்சியில் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது - என்றார்.

# ஜனாதிபதிக்கு இடையூறு செய்தால் நாடு மோசமான நிலைக்கு செல்லும்

## வஜிர அபேவர்தன எச்சரிக்கை



கொழும்பு, மே. 26

நாட்டில் பொருளாதார ஸ்திரன்மையை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு இடையூறு விளைவித்தால் நாடு மிகவும் மோசமான நிலைக்கு செல்லும் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் தொடர்பாக எவரும் குழப்பமடையத் தேவையில்லை. ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்.

இந்த நாடு பொருளாதார வங்குரோத்து நிலையில் இருந்து இன்னும் முழுமையாக விடுபடவில்லை.

இந்த நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை முக்கிய மாகும். எனவேதான் நாடு நெருக்கடியை எதிர்கொண்ட சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் தலைவர்களும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்தார்கள்.

ஆட்சியாளர்கள் எவரையும் குறை கூறாமலேயே ஜனாதிபதியாக அவர் அப்போது நாட்டைப் பொறுப்பேற்றார்.

அவர் இந்த நாட்டை பொறுப்பேற்றதன் பின்னர் இந்த நாடு நெருக்கடி நிலையில் இருந்து கட்டம் கட்டமாக மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

உலகில் எந்தவொரு நாடு வெகு சுலபமாக பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுந்ததில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை பொறுப்பேற்றிருக்காவிட்டால் நாட்டை வீழ்ச்சிப் பாதையில் இருந்து மீட்டெடுத்திருக்க முடியாது.

நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மை இல்லாது போவது மாத்திரமன்றி அரசியல் ஸ்திரத்தன்மையும் இல்லாது போகும்.

ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்க ளுக்கு இடையூறு விளைவித்தால் நாடு மிகவும் மோச மான ஒரு நிலைக்கு செல்லும் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும் - என்றார்.

# 43 பாகிஸ்தான் கைதிகளை திருப்பி அனுப்பும் இலங்கை

கொழும்பு, மே. 26

பாகிஸ்தானும் இலங்கையும் தங்களது நாடுகளிலுள்ள கைதிகளை அவர்களது தாய்நாட்டுக்கு திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க ஒப்புக்கொண்டுள்ளன.

பாகிஸ்தானுக்கான இலங்கை தூதுவர் ஓய்வு பெற்ற அட்மிரல் ரவீந்திர சந்திர ஸ்ரீவிஜய் குணரத்ன மற்றும் உள்நாட்டு அமைச்சர் மொஹ்சின் நக்விக்கும் இடையில் பாகிஸ்தானில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் பரஸ்பர நலன் மற்றும் இரு தரப்பு உறவுகளின் மேம்பாடு குறித்து கலந்துரையாடப்பட்டதோடு, பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் தடுப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டன.

43 கைதிகளை பாகிஸ்தானுக்கு திரும்ப அழைத்து வருவதற்கு இலங்கை அதிகாரிகளுடன் அந்நாட்டு உள்விவகார அமைச்சு கடந்த ஒரு மாதமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இவ்விவகாரத்தில் இலங்கை தூதுவர் சகலவிதமான ஒத்துழைப்பையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளார். (அ)

# ஏழு இலட்சம் இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேற்றம்!

## பொருளாதார நெருக்கடி காரணமாக

கொழும்பு, மே. 26

கடந்த இரண்டு வருடங்களில் சுமார் ஏழு இலட்சம் இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமையே இதற்கு முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தரவுகளின்படி, 2022 ஜனவரி முதல் 2024 மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில், குறைந்த பட்சம் 683,118 இலங்கையர்கள் சட்ட ரீதியில் வெளிநாட்டு வேலைக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org